# சைவ சமய பாடம்

5




கலைவாணி புத்தக நிலையம்



உ
திருச்சிற்றம்பலம்

# சைவ சமய பாடம்

## ஐந்தாம் வகுப்பு

APPROVED FOR CLASS USE
BY THE DIRECTOR OF EDUCATION, JUNE, 1957

[அரசினரின் 1955 ஆம் ஆண்டு சைவ சமய
பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டது.]



கலைவாணி புத்தக நிலையம்
யாழ்ப்பாணம் — கண்டி
பதிப்புரிமை] 1967 [விலை: ரூபா ~~1.10~~

பதின்மூன்றும் பதிப்பு — அக்டோபர், 1967.

இல:- ஈ. பி. பி. / 310 / ஆர்

## சான்றிதழ்

### சைவ சமய பாடம்—5-ம் வகுப்பு

1952-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29-ந் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன் மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷைப் பாட சாலைகளுக்கும், ஆங்கிலப் பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19-ம் (A) பிரிவில் பிரசுரிக் கப்பட்டதற்கமைய இப் புத்தகம் 5-ம் வகுப்பில் சைவ சமய பாடம் படிப்பித்தற்கு ஒரு பாடப் புத்தகமாக 1969-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31-ந் திகதி வரை உபயோகிப்பதற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்) ஜீவானந்த நாணயக்கார,
செயலாளர்,
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
1-6-1964.

இப்புத்தகம் கு. வி. தம்பித்துரை, J. P. அவர் களால் யாழ்ப்பாணம், மெயின்வீதி, 10ம் இலக்கத்தி லுள்ள தமது கலைவாணி அச்சகத்தில் அச்சிட்டு, வெளி யிடப்பட்டது. (465—67.)

# பதிப்புரை

"நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும்நினை
என்றுஞ் சிவன்தா ளினை"

நாம் பிறவி எடுத்ததின் நோக்கம் சிவபெருமானது திருவடியை அடைதலாம். இதற்கு நாம் கடவுளிடத்தில் பற்று வைத்தல் வேண்டும். கோயிலுக்குச் சென்று வழி படுவதினாலும்; திருத்தொண்டுகள் செய்வதினாலும், காலையிலும், மாலையிலும் மற்றும் நேரங்களிலும் கடவுளை வணங்குவதினாலும் இப்பற்றை வளர்த்துக்கொள்ள முடியும். சிறு வயதிற் பழகிய பழக்கம் சிலையில் எழுத் துப்போற் பதியக்கூடியதாதலால், மாணவர்களுக்குச் சிறு வயதிலேயே சமயக் கல்வி ஊட்டப்படல் வேண்டும்.

இதை உணர்ந்தே கல்விப் பகுதியாரும் பாடசாலை களில் சமயக் கல்வியைப் போதிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றார்கள். பாலர்களுக்குச் சமயக் கல்வி போதிப்பது எவ்வளவு கடினமான காரியமென் பதை எல்லா ஆசிரியர்களும் நன்குணர்வர். இக் கடி னத்தை நீக்கும் பொருட்டே சைவ சமய பாடம் என்னும் இந்நூல் வரிசை, சிறுரும் உளங்கொள்ளக்கூடிய வகையில் இனிய, இலகுவான வசன நடையில் தெளி வாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் வரிசையின்கண்ணே கடவுளின் பெரு மையை உணர்த்தும் சிறு கதைகள், கோயில் வழி

பாட்டு முறைகள், இனிய பக்திப் பாடல்கள், பாடக் குறிப்புக்கள், நீதி வாக்கியங்கள், சமய குரவரின் சரித் திரங்கள், கோயில்களின் வரலாறுகள் ஆதியன படங் களுடன் ஆங்காங்கே தேவையான அளவுக்கு இடம் பெற்றுள்ளன. கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத் தப்படும் சமய பாடப் பரீட்சைத் திட்டத்தையும் தழுவியுள்ளது.

இந்நூலைச் சைவ ஆசிரியர்கள் ஆதரிப்பதுடன், இதிற் காணப்படும் பிழைகளை அவ்வப்போது குறிப்பிடு மாறும் தயவாய் வேண்டுகிறோம். இந்நூல் எழுதுங் கால் வேண்டிய ஆலோசனை கூறியும் திருத்தங்களைச் செய்தும் உதவிய ஆசிரியர் திரு. V. S. கந்தையா அவர் களுக்கும், சைவப் புலவர் V. S. சுந்தரலிங்கம் அவர் களுக்கும் எங்கள் நன்றியும் கடப்பாடும் உரியதாகுக.

கண்டி.
15-8-56 } கலைவாணி புத்தக நிலையத்தார்.

# உள்ளுறை


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவாரம் I (திருஞானசம்பந்தர்) | ... 1 |
| 2. | கோயில்களுக்குச் செல்லுதல் | ... 6 |
| 3. | மனுநீதிச் சோழர் | ... 11 |
| 4. | தேவாரம் II (திருநாவுக்கரசர்) | ... 16 |
| 5. | துளசித்தாமர் | ... 24 |
| 6. | சரியை வழிபாடு | ... 28 |
| 7. | ஆற்றிலிட்ட பொன் குளத்தில் மிதந்தது | ... 31 |
| 8. | தேவாரம் III (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) | ... 35 |
| 9. | சிவபெருமான் மாமனாய் வந்து வழக்குரைத்தது | ... 40 |
| 10. | கோயிலைச் சுத்தம் செய்தல் | ... 45 |
| 11. | திருவாசகம் (மாணிக்கவாசகர்) | ... 48 |
| 12. | சிவபெருமான் பொதிசோறு கொடுத்தது | ... 53 |
| 13. | பூந்தோட்டத் தொண்டு | ... 57 |
| 14. | கந்தபுராணம் | ... 60 |
| 15. | நம்பியாண்டார் நம்பி | ... 64 |
| 16. | திருவிளக்கிடுதல் | ... 68 |
| 17. | விருத்தாசல புராணம் | ... 73 |
| 18. | திருப்புகழ் | ... 74 |
| 19. | அப்பூதியடிகள் | ... 78 |
| 20. | கதிர்காமம் I | ... 83 |
| 21. | கதிர்காமம் II | ... 88 |
| 22. | சிவாலயத் தொண்டு இயல் | ... 91 |
| 23. | நீதிப்பாடல்கள் (நல்வழி) | ... 95 |



திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

# சைவ சமய பாடம்

## ஐந்தாம் வகுப்பு

## 1. தேவாரம் I

(திருஞானசம்பந்தர்)

(1)

### திருவண்ணுமலைப் பதிகம்

இப்பாடல் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப் பெற்றது. சைவசமய குரவர் நால்வருள் திருஞானசம்பந்தர் முதல்வராக வைத்து எண்ணத்தக்கவர். இவர் தந்தையார் பெயர் சிவபாதவிருதையர்; தாயார் பெயர் பகவதி அம்மையார். குழந்தைப் பருவத்திலேயே ஞானசம்பந்தர் இறைவனருள் பெற்றுச் சிறப்படைந்தவர். இவர் பிறந்த ஊர் சீர்காழி. இவர் பாடிய கீழ்வரும் பாடல்கள் தேவாரத்தில் ஒரு பகுதியாகும்.

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானேர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்

தூமா மழைநின் றதிர வெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சாரல்
அண்ணா மலையாரே!

(பதவுரை) பூ ஆர் மலர் கொண்டு – அழகு நிறைந்த பூக்களைக்கொண்டு; அடியார் தொழுவார் - தொண்டர்களால் வழிபாடு செய்யப் படுவோரும்; வானோர்கள் புகழ்வார் - தேவர்களால் ஏத்தப்படுவோரும்; மூவார் - பகைவர்களின்; புரங்கள் – ஊர்களாகிய திரிபுர நகரத்தை; எரித்த அன்று - (தம் சிரிப்பால்) எரித்தழித்த அக்காலத்தில்; மூவர்க்கு - பிரமன், திரு; மால், உருத்திரன் ஆகிய முப்பெரும் மூர்த்திகட்கும் அருள் செய்தார் - திருவருள் செய்து அருளியவரும்; தூ - தூய்மையான; மாமழை - கருநிறமுள்ள மேகம்; நின்று - வானிடமெங்கும் பரவி நின்று; அதிர – முழக்கம் செய்ய; வெருவி - அம்முழக்கத்தைக் கேட்டு அஞ்சி; தொறுவின் - நாட்டிலுள்ள பசுக்கூட்டங்களின்; நிரையோடும் - வரிசைகளுடனும்; ஆமாம்பிணை - காட்டுப் பசுக்கள்; வந்து அணையும் - வந்து சேருகின்ற; சாரல் - சரிவுகளையுடைய; அண்ணாமலையாரே - திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே ஆவார். (அத்தகையாரை வாழ்த்தி நாம் வணங்குவோமாக.)

(2)

## கோயில் (சிதம்பரம்) பதிகம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரை பற்றா(ப்) பாவமே.

(பதவுரை) கற்று - மறை, ஆகமம் முதலிய நூல்களைக் கற்று; எரிஓம்பி - அக்கற்ற முறைப்படி வேள்வித் தீ வளர்த்து (இறைவனை வணங்கி வேண்டி); கலியை - நாட்டிலே வறுமையை; வாராமே – வாராதபடி; செற்றார்- ஒழிந்தவர்களான அந்தணர்கள்; வாழ் - இருக்கின்ற; தில்லை . தில்லை நகரிடத்தேயுள்ள; சிற்றம்பலம் - பொன்னம்பலத் திருவரங்கிலே; மேய - திருநடனங்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற; முற்று - இளமை பொருந்திய; வெண் திங்கள் - வெண்மை பொருந்திய மூன்றாம் பிறையைச் சூடிய; முதல்வன் பாதமே – எல்லா உலகங்கட்கும் தலைவனாகிய சிவபெருமானுடைய திருவடிகளையே; பற்று நின்றாரை - விடாது பிடித்து அன்பு கொண்டு ஒழுகுகின்ற அடியவர்களை; பாவம் பற்று- தீமைகள் வந்து சேரா. (அவர்கள் இன்பத்துடன் எக்காலத்தும் வாழ்வார்.)

(3)

## திருவாலவாய்த் திருப்பதிகம்

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே!

(பதவுரை) கூடல்-திருக்கூடலாகிய; ஆலவாயிலாய்- திருவாலவாய் என்று பெயர் பெற்ற மதுரைமாநகரில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனே; குற்றம் நீ – உலகில் குற்றமாகக் காணப்படுபவனும் நீயே; குணங்கள் நீ - உயர்ந்த பண்பாக இருப்பவனும் நீயே; சுற்றம் நீ - சுற்றத்தாராக இருப்பவனும் நீயே; பிரானும் நீ - இவ்வாறான பெருமையுடையவனும் நீயே; தொடர்ந்து - தொடர்ச்சியாக; இலங்கு - விளங்குகின்ற; சோதி நீ - ஒளிப்பொருளும் நீயே; கற்ற - கற்கப்பட்ட; நூல் -

அறிவு நூல்களின்; கருத்தும் நீ - உட்பொருளாக; இருப் பவனும் நீயே; அருத்தம் - செல்வப் பொருளும்; இன்பம் - அதனுல் வரும் இன்பமும்; என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவைகள்; முற்றும் நீ - எல்லாம் நீயே ஆக இருக்க; புகழ்ந்து - உன்னைக் குறித்துப் புகழ்ந்து பேசி; முன் - உன் திருமுன்னுக; உரைப்பது என் - சொல்லக்கூடியது வேறு என்ன இருக்கின்றது? முகம்மனே - புகழ்ந்து வாழ்த்துதல் வீண் உபசார மொழிகளேயன்ருே? (எல்லாப் பொருளின் உள்ளும் புறமும் இறைவனே எனப் புகழ்ந்தவாருகும்.)

## பயிற்சியும் விஞக்களும்

1. (அ) "பூவார் மலர் கொண்...." என்ற தொடக்கத் தையுடைய தேவாரத்தை வரிக்கிரமமாக எழு துக.

   (ஆ) இத்தேவாரத்தினைப் பாடியவர் யார்?

   (இ) பாடப்பட்ட இடம் யாது?

2. (அ) "கற்ருங் கெரியோம்பி...." என்ற தொடக்கத் தையுடைய தேவாரம் யாரால் எங்கு பாடப் பட்டது?

   (ஆ) அத்தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

   (இ) யாரைப் பாவம் பற்ருது?

   (ஈ) பொருள் எழுதுக:

   எரி — கலியை — செற்ருர் — முற்ரு வெண்டிங்கள் —

3. (அ) "குற்றம் நீ...." என்ற தொடக்கத்தையுடைய தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

   (ஆ) இத்தேவாரம் எவ்விடத்து யாரால் பாடப்பட் டது?

4. சுருக்கமான விடைதருக:

(i) சிதம்பரத்தைக் குறிக்கும் வேறு மூன்று பெயர்கள் தருக.

(ii) சிதம்பரத்தில் வாழ்வோர் யார்?

(iii) பூவார் மலர் கொண்டு என்ற தேவாரத்தில் வரும் மூவர் என்று சுட்டியது யாரை?

(iv) "முற்றும் நீ" என்ற வாக்கியத்தால் பெறப்படும் இறைவனின் குணம் யாது?

5. பொருள் எழுதுக:

ஆலவாய் — ஓம்பி — சிற்றம்பலம் —
அருத்தம் — ஆமாம்பிணை —

## 2. கோயில்களுக்குச் செல்லுதல்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். அதிலும் கூன், குருடு, செவிடு முதலாய உறுப்புக் குறைவின்றிப் பிறத்தல் அரிதினும் அரிதாகும். இத்தகைய கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை நாம் பெற்றுள்ளோம். எனவே, அதன் பயனை நாம் அடைய வேண்டுவது முதன்மையாகும்.

நமக்கு இப்பிறவியை அளித்தவர் முழுமுதல் தலைவராகிய சிவபெருமான் அன்றோ! அவரை மனம், மொழி, மெய்களால் நாம் வழிபடக் கடமைப் பட்டிருக்கின்றோம். 'கடவுள் உண்டு' என்று பலரும், 'கடவுள் இல்லை' என்று சிலரும் கூறுவர். 'கடவுள் உண்டு' என்பதே அறிஞர் ஆராய்ந்து கண்ட உண்மை.

ஒரு குடத்தையோ அல்லது ஆடையினையோ நாம் காண்கின்றோம் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குடத்தையும் ஆடையினையும் செய்தவர் ஒருவர் இருக்க வேண்டும் அல்லவா? அதைப்போல இவ்வுலகத்தையும் உலகிலுள்ள உயிரினங்களையும் மலை, கடல், ஆறு முதலிய இயற்கை வளங்களையும் உண்டாக்கியவர் ஒருவர் இருக்கத்தானே வேண்டும்; அவர்தான் கடவுள். இவரைத்தான் நாம் சிவபெருமான் என்கிறோம்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமே சிவன்கோயில் எனப்படும். இப்பிறவியையும்,

பிறவிக்கு வேண்டிய பயன்கள் யாவையும் அளித்து நம்மைக் காத்துவரும் தயாபரனுகிய பெருமானை நாம் வழிபடல் வேண்டுமன்ருே?

ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் நித்திரை விட்டு எழுதல் வேண்டும். எழுந்ததும் மலசலங் கழித்து பல் துலக்கி அதன் பின்னர் தண்ணீரில் நீராடுதல் வேண்டும். ஆறு, குளம், ஓடை, கேணி முதலியவையே நாம் நீராடுவதற்கு ஏற்றவை.

நீராடிய பின் தோய்த்து உலர்ந்த ஆடையைத் தரித்துக்கொள்ள வேண்டும். பிறகு, 'சிவ சிவ' என்று கூறித் திருநீறணிந்து கொண்டு சிவன் கோயில்களுக்குச் செல்லுதல் வேண்டும். கோயில்களுக்குச் செல்லும்போது கோயிலுக்கு முன்னர் வளர்ந்த கோபுரம் இருப்பதைக் காணலாம். இதனைத் "தூலலிங்கம்" என்பர். ஆகவே, அதனை முதலில் வணங்கிச் செல்லல் வேண்டும்.

திருக்கோயிலுக்கு உள்ளே சென்றதும் நாம் பலிபீடத்தைக் காணலாம். அப்பலிபீடத்துக்கு இப்பால் நின்று அமைதியுடன் வழிபாடு செய்தல் வேண்டும். ஆண்கள் தலை, இரு கைகள், இரு செவிகள், மோவாய், இருபுயங்கள் ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பொருந்த வீழ்ந்து வணங்குதல் வேண்டும் இது அட்டாங்க நமஸ்காரம் எனப்படும். பெண்கள் தலை, இரு கைகள், இரு முழந்தாள்கள் ஆகிய ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் படியுமாறு வீழ்ந்து வணங்

குதல் வேண்டும். இது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும்.

நிலத்தில் வீழ்ந்து வணங்கும்போது மூன்று முறை, ஐந்து முறை, ஏழு முறை, ஒன்பது முறை இவைகளில் ஏதேனும் ஒரு வகையைக் கொண்டு தவருமல் வணங்குதல் நல்லது. இவ்வாறு வணங்கிய பின் திருக்கோயிலை வலம்வர வேண்டும். வலம் வரும்போது. இரு கைகளையும் தலைமேற் குவித்து, சிவபெருமான் திருப்பெயர்களை ஓதிக்கொண்டும் தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டும் மன அமைதியுடன் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலுக்குள் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார், முருகப்பெருமான், உமையம்மை முதலிய கடவுள்களையும் வணங்குதல் வேண்டும். இறைவருக்கு முழுக்காட்டுதல், அமுதூட்டல் முதலியன நடைபெறும்போது வணங்குதல் ஆகாது. சிவபெருமான் திருச்சந்நிதியை அடைந்து வணங்கும்போது திருவைந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். இயன்ற அளவு திருவைந்தெழுத்தை உருச் செய்தல் மிகவும் நல்லது.

நாள்தோறும் நாம் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். எனினும் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோசம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, சிவராத்

திரி முதலிய புண்ணிய நாட்களில் கோயில்களுக்குச் சென்று வழிபடுவது மிகவும் நலமாகும். இதனால் நற்பயன் விளையும்.

குளிக்காமலும் கால்கழுவாமலும் நாம் கோயிலுக்குச் செல்லுதல் கூடாது. கோயிலுக்குள் நாம் செய்யத் தகாத செயல்கள் பல உள்ளன. சிறுநீர் கழித்தல், மலங்கழித்தல், தூங்குதல், மயிர் கோதி முடித்தல், காலை நீட்டி உட்கார்ந்திருத்தல் முதலாயின செய்யத்தகாத குற்றங்களாகும். தலையில் தலைப்பாகை கட்டிக் கொண்டோ, முக்காடு இட்டோ, செருப்புக் காலுடனே கோயிலுக்குள் செல்லுதல் கூடாது. கோயிலுக்குள் சென்றபின் வீண் பேச்சிற்கும், சண்டை சச்சரவுகளுக்கும் இடமளிக்கக்கூடாது.

மேலே கூறிய குற்றங்கள் நம்மிடம் நிகழாமல், இறைவனிடம் முழுச் சிந்தையராய்ச் சென்று வழிபட்டு வருதல் வேண்டும். அதுவே நன் மாணவர்க்கு அழகு ஆகும். இறைவனும் நம் வழிபாட்டிற்கு இரங்கி, நாம் வேண்டுவன அளித்து நம்மை மகிழச் செய்வார்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

### பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக.

(அ) நமக்கு இப்பிறவியை அளித்தவர் யார்?

(ஆ) கடவுளைப் பற்றிப் பெரியோர்கள் கூறும் உண்மை யாது?

(இ) தயாபரன் என்ற பெயர் யாருக்குண்டு?

(ஈ) கோயிலின் கோபுரம் எவ்வாறு பெயர் பெறும்?

(உ) கோயிலில் முதலில் வணங்க வேண்டிய மூர்த்தி யாவர்?

2. இடைவெளி நிரப்புக:

(i) திருக்கோயிலுக்கு உள்ளே சென்றதும் முதலில் —க் காணலாம்.

(ii) பெண்கள் — நமஸ்காரம் பண்ணல் —.

(iii) இறைவருக்கு அபிடேகம் நடக்கும் பொழுது — வணங்கல் ஆகாது.

(iv) புண்ணிய காலங்களிலாவது —ச் சென்று வழிபடல் —.

(v) கோயிலினுள் —த் தகாத குற்றங்கள் — உண்டு.

3. பின்வருவன குறித்து ஒவ்வோர் வாக்கியம் எழுதுக. (1) அட்டாங்க நமஸ்காரம் (2) திருவைந்தெழுத்து (3) சிவராத்திரி (4) வலம் வருதல்.

4. கோயிலினுள்ளே சென்றதும் எவ்வாறு வழிபாடு செய்தல் வேண்டும்?

5. கோயில் வழிபாட்டில் செய்யத்தகாத குற்றங்கள் பத்து எழுதுக.

# 3. மனுநீதிச் சோழர்

முன்னொரு காலத்தில் சோழநாட்டை ஓர் அரசர் ஆட்சி செய்து வந்தார். அவர் பெயர் மனுநீதி கண்ட சோழர் என்பது. அவர் திருவாரூர் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு இருந்தார். அவர் தம் குடிமக்களிடத்தில் மிக்க அன்புடையவர்; மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதுபவர்; எவ்வுயிர்க்கும் தீங்கு நேரக் காணமாட்டார்; நீதிமுறை தவருமல் ஆட்சி செய்து வந்தார்.

திருவாரூரிலே ஒரு சிவன் கோயில் இருந்தது. அதில் எழுந்தருளியிருந்த கடவுள் பெயர் வன்மீகநாதர் என்பர். அப்பிரானிடத்தில் மனுநீதி கண்ட சோழர் நீங்காத பற்றுக்கொண்டவர். சைவாகம விதிமுறைகளின்படி அக்கடவுளுக்கு வழிபாடுகள், திருவிழாக்கள் முதலியன செய்வித்து வந்தார்.

மனுநீதிச் சோழனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவன் பெயர் வீதிவிடங்கன் என்பது. வீதிவிடங்கன் இளமையிலேயே யானையேற்றம், குதிரையேற்றம், வாட்பயிற்சி, தேர் செலுத்துதல் ஆகிய கலைகளைக் கற்றுத் தேர்ந்தான். எல்லாக் கலைகளையும் கற்று நாட்டின் இளவரசனுக இருந்து வந்தான். இவனும் வன்மீகநாதரிடம் பற்றுக் கொண்டவன்.

ஒருநாள் வீதிவிடங்கன் தேரில் ஏறி வன்மீகநாதர் கோயிலுக்குச் சென்றுகொண்டு இருந்

தான். போகும்பொழுது திடீரென ஒரு பசுவின் இளங்கன்று தேர்ச்சக்கரத்தில் சிக்கி இறந்தது. இதைக் கண்ட தாய்ப்பசு கண்ணீர் விட்டுக் கதறியது. ஆண்டவனை வழிபட ஆலயத்துக்குச் செல்லும்போது, கன்றின்மேல் தேரை ஏற்றிக் கொன்று தீராப்பழிக்கு ஆளாகி விட்டோமே என்று இளவரசன் மிகவும் மனம் வருந்தினான். பிறகு, அமைச்சர்களின் ஆறுதல் மொழிகளில் மனந்தேறுதல் அடைந்து அரண்மனை வந்து அடைந்தான்.

கன்றை இழந்த தாய்ப்பசு கதறிய வண்ணம் அரண்மனைக்கு ஓடிவந்தது. அரண்மனை முன் வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியில் தொங்கிய கயிற்றை வாயினாற் கவ்வி இழுத்து மணியை அடித்தது. அம்மணியின் ஓசையைக் கேட்ட மன்னர் மனுநீதிச்சோழர், பசு நின்ற இடத்திற்கு ஓடோடி வந்தார். தன் ஆட்சியின் கீழ் இருக்கும் குடிமக்கள் எவருக்கேனும் ஆபத்து நேர்ந்தால்தான் அம்மணி அடிக்கப்படல் வேண்டும் என்பது நாட்டின் விதிமுறை. ஆனால், நேர்மையான ஆட்சி நிலவியதால் மனுநீதிச் சோழர் காலத்தில் ஒருநாளும் அந்த மணியை எவரும் அடித்ததில்லை. எதிர்பாராத இந்நிகழ்ச்சி அரசரைத் திடுக்கிட வைத்தது. அரசர் உண்மையை அறிந்தார்.

நீதிவழுவாமல் ஆட்சி செய்த அம்மன்னர், பசுவின் கன்றை மாளச் செய்தவன் தன் ஒரே

மகன் என்பதை அறிந்ததும் அவனைத் தேர்க்காலில் இடுமாறு ஆணையிட்டார். பசுவின் கன்று துடிதுடித்து மாண்டதைப் போலத் தன் மகனும் மாளத்தான் வேண்டும் என்று முடிவு கூறிவிட்டார். அமைச்சர்கள் எவ்வளவு தடுத்தும் அரசர் தன் முடிவிலிருந்து மாறவில்லை.

ஓர் அமைச்சரை அழைத்து, வீதி விடங்கன் மேல் தேர் செலுத்திக் கொன்று தன் தண்டனையை நிறைவேற்றுமாறு சோழ மன்னர் பணித்தார். இதற்கு இணங்காத அந்த அமைச்சர் தன்



வீதிவிடங்கன மேல் தேர் செலுத்துதல்

உயிரையே விட்டுவிட்டார். இதனை அறிந்த மன்னர், "மன்னர் மகனேயாயினும் நீதி ஒன்று தான்," என்று கூறி, வீதிவிடங்கனை வீதியில்

கிடத்தித் தானே தேரைச் செலுத்தித் தண்டனையை நிறைவேற்றினர். இளவரசன் மார்பின் மேல் தேர் உருளைகள் பொருந்துமாறு தேரை ஓட்டினர்.

மனுநீதிகண்ட சோழரின் நேர்மையையும், நீதிமுறை பிறழாச் செய்கையையும் கண்ட இறைவர், உமாதேவியாருடன் இடபவாகனத்தின்மீது காட்சியளித்தார். இறந்த பசுவின் கன்றையும், இளவரசனையும் அமைச்சரையும் உயிர் பெற்று எழச் செய்தார். மண்ணவர் முதல் விண்ணவர் யாவரும் வியந்து போற்றினர். நெறிமுறை தவருது நீதிசெலுத்திய மன்னரையும் வாழ்த்தினர். இறைவனது கருணைத்திறம் நம்மால் இயம்பும் தரத்ததோ?

## பயிற்சியும் விணக்களும்

1. சுருக்கமான விடை தருக:—

(அ) சோழ நாட்டின் தலை நகரம் யாது?

(ஆ) திருவாரூரில் உள்ள சிவாலயத்தில் குடி கொண்ட கடவுள் பெயர் யாது?

(இ) மனுநீதிச்சோழனின் புதல்வன் பெயர் என்ன?

(ஈ) அரசர்க்குரிய கலைகளில் நான்கு எழுதுக.

(உ) மனுச்சோழனைத் திடுக்கிட வைத்த சம்பவம் யாது?

(ஊ) "மன்னர் மகனே ஆயினும் நீதி ஒன்று தான்" இது யாரால் எப்பொழுது கூறப்பட்டது?

2. மனுநீதிச் சோழரிடம் காணப்பட்ட சிறந்த குணங்கள் எவை?

3. மனுச்சோழன் மனு நீதியை எவ்வாறு நிலைநாட்டினன்?

4. இக்கதையைச் சுருக்கி பதினைந்து வரிக்கு மேற்படாது எழுதுக.

# 4. தேவாரம் II

## (திருநாவுக்கரசர்)

## (1)

## திருவையாற்றுப் பதிகம்

திருநாவுக்கரசர் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இவர் பாடிய பாடல்கள் தேவாரத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன.

திருமுனைப்பாடி என்னும் நாட்டைச் சேர்ந்த திருவாமூர் என்னும் ஊரில் இவர் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் புகழனுர் என்றும், தாயார் பெயர் மாதினியார் என்றும் கூறுவர். இவர் வேளாளர் குடியைச் சேர்ந்தவர். இவர் சமண மதத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாறினுர். சமணர்களால் பெரிதும் துன்புறுத்தப்பட்டார். இவரை அப்பர் என்றும் கூறுவர். இறைவன் சூலை நோய் தந்து இவரை ஆட்கொண்டார். கீழ்வருவன இவர் பாடிய பாடல்களுள் சில.

இது திருநாவுக்கரசர் திருக்கைலாயக் காட்சியைக் கண்டபோது பாடியருளியது.

மாதர்(ப்) பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்.

(பதவுரை) மாதர் - அழகுள்ள; பிறைக்கண்ணியானை - மூன்றும் பிறையை மலர்க் கண்ணிபோல் சூடியவனாகிய சிவபெருமானை; மலையான் - இமயமலை அரசனுடைய; மகளொடும் - மகளாகிய உமை அம்மையாரோடும்; பாடி - பாடல்கள் பாடி! போதொடு நீர் சுமந்து - அலரும் பருவத்தையுடைய பூக்களுடன் நீருங் கொண்டு சாத்தியும்; முழுகுவித்தும்; ஏத்தி - வணக்கம் செய்ய; புகுவார் அவர் - போகிறவர்களாகிய தொண்டர்களின்; பின் புகுவேன் - பின் சென்ற நான்; யாதும் சுவடுபடாமல் - எனது எந்த அடிச்சுவடும் பதியாமல் மெல்ல நடந்து; ஐயாறு - திருவையாற்றுத் திருத்தலத்தை; அடைகின்ற போது - நான் சேருகின்ற காலத்தே; காதல் - அன்பினையுடைய; மடம் - இளமை பொருந்திய: பிடியொடும் - பெண் யானையுடனே; களிறு - ஆண் யானைகளும்; வருவன - வருபவற்றை; கண்டேன் - நான் பார்க்கலானேன்; அவர்-எம் இறைவனுன அச்சிவபெருமானுடைய; திருபாதம் கண்டேன் - அழகிய திருவடிகளையும் பார்த்து கண்டு அறியாதன - இதற்கு முன் நான் பார்த்தறியாத அற்புதக் காட்சியை; கண்டேன் - பார்க்கலானேன். (என்னே! எம்பெருமான் எனக்கு அளித்தருளிய காட்சி! என்ன, இஃது என்னே!)

## (2)

## திருக்கச்சியேகம்பப் பதிகம்

### இது மனத்துள் வைத்த திருப்பதிகம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே

(பதவுரை) கரவு ஆடும் - வஞ்சகச் செயல்களைச் செய்கின்ற; வல் - வலிமை கொண்ட; நெஞ்சர்க்கு - மனத்தையுடையவர்கட்கு; அரியானை - எட்டாதவனை; கரவார்பால் - வஞ்சகச்செயல் அற்றவர் இடத்திலே; விரவு ஆடும்-கலந்து சேர்கின்றன; பெருமானை-பெருமை பொருந்தியவனை; விடை ஏறும் - காளை ஊர்தியில் ஏறுகின்ற; வித்தகனை – பேரறிவுடையவனை; அரவு ஆட- தாம் அணிந்துள்ள நாகபாம்பு அசைய; சடை தாழ- செஞ்சடை சாய்ந்துவிழ; அம்கையினில் - தம் அழகிய கையிடத்திலே; அனல் – நெருப்பினை, ஏந்தி - ஏந்திக் கொண்டு; இரவு ஆடும் – நள்ளிருட் காலத்தில் அருட் கூத்தாடுகின்ற; பெருமானை - பெருமையுள்ளவனை சிவபெருமானை; என்மனத்தே - எனது மனத்தினிடத்தே; வைத்தேன் - இருக்கச் செய்துகொண்டேன். (இனி எனக்கு என்ன குறை? அருள் கைகூடும்.)

## (3)

## திருவாரூர்த் திருத்தாண்டகம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

(பதவுரை) நெஞ்சே! - என்மனமே! நிலைபெறும் - என்றும் நீ நிலைத்திருக்கின்ற; ஆறு -- வழியை; எண்ணுதியேல் - (நீ) கருதுவாயானால்; நீ வா - என்னிடம் வருக. (நான் கூறுவதைக் கேள்) நித்தலும் -

ஒவ்வொரு நாளும்; எம்பிரான் உடைய - எம்பெரு மான் எழுந்தருளியிருத்தற்கு உரிய; கோயில்புக்கு - திருக்கோயிலுக்குச் சென்று; புலர்வதன் முன் – நன்கு பொழுது விடிவதற்கு முன்பாக; அலகு இட்டு - திருக் கோவிலில் தூசிகளைத் துடைத்துப் பெருக்கி; மெழுக் கும் இட்டு – சாணங்கொண்டு மெழுகியும்; பூமாலை புனைந்து - சிவபெருமான் திருவுருவத்துக்குப் பூமாலை சூட்டி; ஏத்திப் புகழ்ந்து - இறைவன் பெருமையை மிகவும் புகழ்ந்து; வாழ்த்தி; பாடி - பாடுதல் செய்து; தலை ஆர - தலையானது இறைவன் திருவடிகளில் பொருந்த; கும்பிட்டு – வணங்கி; கூத்தும் ஆடி - இறை வன் வழிபாட்டு மகிழ்ச்சியினால் கூத்தாடுதலும் செய்து சங்கரா – இன்பந் தருபவனே! சய - வெற்றியுடைய வனே! போற்றி போற்றி – என்னைக்காக்க, காக்க; என்றும் – என்று கூறியும்; அலைபுனல்சேர் - அலைகளை யுடைய; எம் ஆதி - எம் முதல்வனே! என்றும் – என்று கூறியும்; ஆரூரா! - திருவாரூரில் எழுந்தருளி யிருப்பவனே! என்று என்றே - என்று அவன் திருப் பெயர்களைக் கூறிக்கூறியே; அலறு நில்லே - அழைத் துக்கொண்டே இருப்பாயாக. (உனக்குச் சிவபெரு மான் திருவருள் கிட்டும்; உறுதி; உறுதி; உறுதி; நெஞ்சே! நீ இறைவனை விடாது பற்றுவாயாக என் றவாறு.)

## (4)

## பொது — தனித்திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ

துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

(பதவுரை) அப்பன் நீ -(சிவபெருமானே) தந்தையும் நீயே ஆகும்; அம்மை நீ - (என்னைப் பெற்ற) தாயும் நீயே ஆகும்; ஐயனும் நீ - எனக்குத் தலைவனும் நீயே ஆகும்; அன்பு உடைய - (என்னிடத்து) அன்பை உடைய; மாமனும் - (தாயுடன் பிறந்த) மாமனும்; மாமியும்நீ - மாமியாரும் நீயேயாகும்; ஒப்பு உடைய - அழகுள்ள; மாதரும் - பெண்களும்; ஒண்- சிறப்புடைய; பொருளும் நீ - (மணி, பொன் முதலிய பொருள்களும் நீயே ஆகும்; ஒருகுலமும் - எனக்கு ஒரே சாதியும்; சுற்றமும் - எனக்குச் சுற்றத்தாரும்; ஓர் ஊரும் நீ - எனக்கு ஒரே ஊராக இருப்பவனும் நீயே ஆகும்; துய்ப்பனவும் - நான் அனுபவிப்பனவும்; உய்ப்பனவும் - நான் ஊர்தியாகக் கொண்டு செலுத்துவனவும்; தோற்றுவாய் நீ - படைத்துக் கொடுப்பவனும் நீயே ஆகும்; துணை ஆய் - எனக்கு உற்ற துணையாக; என் நெஞ்சம் - எனது மனத்தை; துறப்பிப்பாய் - பற்று நீங்கச் செய்வோனும் நீயேயாகும்; இப்பொன் நீ - இந்தப் பொன்னாக இருப்பவனும் நீயேயாகும்; இம்மணி நீ - இந்த மணிகளாக விளங்குவோனும் நீயே ஆகும்; இம்முத்தும் நீ - இந்த முத்தாக இலங்குவோனும் நீயே ஆகும்; இறைவன் நீ - (மேற்கூறிய எல்லாப் பொருள்களின் ஊடேயும்) கலந்து இருப்பவனும் நீயே ஆகும்; ஏறு - காளையை; ஊர்ந்த - ஊர்தியாகக் கொண்டு ஏறிச் செலுத்திய; செல்வன் - அருளாளனும்; நீயே - நீயேயாகும். (இத்தகைய பெருமை பெற்ற உன்னை வாழ்த்துகின்றேன்; வணங்குகின்றேன்; அருள் செய்வாயாக.)

## (5)

## திருவையாறு

[திருத்தாண்டகம் 38-ல் இப்பாடல் உள்ளது.]

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

(பதவுரை) திருஐஆறு - அழகிய திரு ஐயாற்று நகரை விட்டு; அகலாத - நீங்காது இருக்கின்ற; செம்பொன் - சிவந்த பொன்னை யொத்த; சோதி - ஒளிவடிவினரான சிவபெருமானே! எல்லா உலகமும் - (மேல், கீழ், நடு என்னும்) எல்லா உலகங்களும்; நீயே ஆனாய் - நீயே ஆகி இருக்கின்றாய்; ஏகம்பம் - திருவேகம்பமாகிய காஞ் சீபுரத்தில்; மேவி - விரும்பி; நீயே இருந்தாய் - நீயே எழுந்தருளியிருந்தாய்; நல்லார் - நல்லவர்களின்; ஐ - மேன்மையான; நன்மை - நல்ல செய்கைகளை, நீயே அறிவாய் - நீயே தெரிவாய்; ஞான - உண்மையறிவான; சுடர் - ஒளியுள்ள; விளக்கு ஆய் - விளக்காக; நீயே நின்றாய் - நீயே நின்றருளினாய்; பொல்லா - தீமையான; வினைகள் - செய்கைகளை; நீயே அறுப்பாய் - நீயே கெடுத்தருளுவாய்; புகழ் - கெடாத புகழையுடைய; சே அடி - சிவந்த உன் திருவடிகளை; என்மேல் - என் மீது; நீயே வைத்தாய் - நீயே சூடியருளினாய்; செல்வாய - எங்கும் செல்வாக்குடையவனான; செல்வம் -

உனது பேரருட் செல்வத்தை; நீயே தருவாய் - நீயே எனக்குத் தந்தருள்வாயாக. (எல்லா உலகும், எல்லாச் செயலுமுள்ள நீ என்னை ஆட்கொண்டு அருளுக.)

## பயிற்சியும் வினாக்களும்

1. (அ) "மாதர் பிறைக் கண்ணியானை........." என்ற முதலையுடைய தேவாரத்தினை வரிபிழையாது எழுதுக.

   (ஆ) இத்தேவாரம் எவ்விடத்து யாரால் பாடப் பெற்றது?

   (இ) கயிலைக்காட்சியை அப்பர் திருவையாற்றில் எவ்வடிவிற் கண்டார்?

   (ஈ) இறைவனுக்குப் பூசனை புரிய அடியார் கொண்டு செல்லும் பிரதான பொருள்கள் இரண்டு கூறுக.

2. (அ) "கரவாடும் ........."என்ற தொடக்கத்தை யுடைய தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

   (ஆ) இத்தேவாரம் யாரால் எவ்விடத்தில் பாடப் பட்டது?

   (இ) இத்தேவாரத்தில் இறைவன் வடிவம் எப்படி கூறப்படுகின்றது?

   (ஈ) இறைவன் யாருக்கு அரியவன்?

   (உ) "கரவார்பால் விரவாடும் பெருமான்" இதன் பொருளை விளக்குக.

3 (i) "திலைபெறுமாறெண்ணுதியேல் ......" என்ற தேவாரம் யாரால் எவ்விடத்தில் பாடப்பட்டது?

(ii) இத்தேவாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்தினைச் சுருக்கமாக எழுதுக?

(iii) பொருள் எழுதுக:

புலர்தல் —— அலகிடல் —— புனைந்து —— சங்கரன் —— புனல் —— ஆதி —— அலறல்——

4. (i) "அப்பன் நீ ......" என்ற முதலையுடைய தேவாரத்தினை வரி பிழையாது எழுதுக.

(ii) இத்தேவாரம் யாரால் பாடப்பட்டது?

(iii) துய்ப்பன, உய்ப்பன இவற்றின் பொருளை விளக்குக.

5. பொருள் எழுதுக:

ஏகம்பம் —— வித்தகன் —— அங்கை ——
பொல்லாவினை —— இரவாடும்பெருமான் ——
செல்வாய செல்வம் ——

## 5. துளசித்தாமர்

முன்னொரு காலத்தில் துளசித்தாமர் என்ற செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏராளமான தோட்டங்களும், நிலங்களும் இருந்தன. அவரிடத்தில் ஆயிரக் கணக்கான பேர் வேலைக்காரர்களாக இருந்தார்கள். அவர்களில் இராமன் என்ற வேலைக்காரனும் ஒருவன்.

துளசித்தாமருக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவர் வேலைக்காரன் இராமனுக்கும் ஒரு பிள்ளை இருந்தான். சிறுவர் இருவரும் தோட்டங்களில் ஒன்றுக விளையாடுவது வழக்கம். ஒரு நாள் இருவரும் விளையாடிக்கொண்டு இருக்கும் பொழுது, இவர்களுக்குள் சண்டை மூண்டுவிட்டது இராமன் பிள்ளை, துளசித்தாமர் பிள்ளையை அடித்து விட்டான்.

இராமன் பிள்ளை வயதில் மூத்தவன். ஆகையால் அடி சிறிது வலிமையாகவே பட்டுவிட்டது. செல்வந்தர் வீட்டுச் செல்வ மகன் அழுது கொண்டே தாயிடம் சென்று "கூலிக்காரன் பிள்ளை என்னை அடித்துவிட்டான்" என்று சொல்லி மேலும் அழுதான்.

துளசித்தாமர் மனைவிக்குச் சினம் பொங்கியது. "கூலிக்காரச் சிறுவன் நம் செல்வமகனை அடிப்பதா?" என்று வீறுகொண்டு எழுந்தாள். துளசித்தாமரை அடைந்து நடந்தவற்றைச் சொல்லி, கூலிக்காரன் மகனைத் தண்டிக்க


வேண்டும் என்று சொன்னான். அதைக்கேட்ட துளசித்தாமர் "அவன் அடித்தானென்றால், இவன் ஏதேனும் தவறு செய்து இருக்கவேண்டும். பிழை செய்யாதபோது இவர்களுக்குள் சண்டைமூளாது. இவன் தான் செய்த குற்றத்தை மறைக்கிறான்," என்று கூறினார்.

துளசித்தாமர் மனைவிக்கு மனம் பொறுக்கவில்லை. "நம் குழந்தை தவறு செய்தாலும் ஒரு கூலிக்காரக் கீழ்ச்சாதிச் சிறுவன் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? இதற்காக அடிப்பதா? அவன் நிலை என்ன? நம் மதிப்பு என்ன? மற்ற வேலைக்காரர்கள் நம்மை மதிப்பார்களா? அவனைத் தண்டிக்கத்தான் வேண்டும்" என்று மேலும் வற்புறுத்திக் கூறினாள்.

துளசித்தாமர் பெருநோக்கமுடையவர்; மக்களிடத்தில் பிறவியின் காரணமாக உயர்வு, தாழ்வு காணாதவர். எல்லோரையும் ஒன்று போலக் கருதி, எல்லோரிடத்திலும் ஒத்த அன்பு செலுத்துபவர். இவர் தன் மனைவியைப் பார்த்து, "அப்படிச்சொல்லக்கூடாது. கீழ்ச்சாதி என்றும், மேல் சாதி என்றும் ஒன்று இல்லை. ஆனால், நீயோ கூலிக்காரனைக் கீழ்ச்சாதி என்று சொல்கிறாய். தாழ்ந்தவர்கள் ஒரு குற்றத்தைச் செய்தால் உயர்ந்தவர்களாகிய நாமல்லவோ அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்; இதுதான் நம் கடமை" என்று அறிவுரைகள் பல கூறினார்.

அம்மையாரும் மனம் திருந்தினார். வயிற்றுப் பிழைப்புக்காகத் தம்மிடத்தில் வேலை செய்பவ

னைக் கீழ்ச்சாதி என்று சொல்லக்கூடாது என்பதை உணர்ந்தார். துளசித்தாமர் தன் மகனை அருகே அழைத்து, "பிள்ளாய்! நீ ஏதோ குற்றம் செய்து



துளசித்தாமரும் அவர் மனைவியாரும்

விட்டாய். அந்தக் குற்றத்துக்காக நீ அவனிடஞ் சென்று மோதகமும் பழங்களும் கொடுத்து அவனை ஆறுதல் படுத்திவிட்டு வா" என்று கூறினார்.

சிறுவனும் தந்தையின் கட்டளைப்படியே சென்றான். இராமனின் சிறுவனுக்குப் பழங்கள் கொண்டுபோய்க் கொடுத்தான். இதைக் கண்ட வேலைக்காரச் சிறுவன் அச்சங்கொண்டான். "நான் அறிவின்மையால் உன்னை அடித்துவிட்டேன். அன்பு கூர்ந்து என்னை மன்னித்துவிடு,"

என்று அவன் வேண்டிக்கொண்டான். இருவரும் மீண்டும் நண்பர்களாகி விளையாடி மகிழ்ந்தனர்.

## பயிற்சியும் வினாக்களும்

1. பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

   (அ) "கூலிக்காரன் பிள்ளை என்னை அடித்துவிட்டான்"

   (ஆ) "கூலிக்காரச் சிறுவன் நம் செல்வ மகனை அடிப்பதா"

   (இ) "அவன் அடித்தானென்றால் இவன் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும்.

   (ஈ) "பிள்ளாய்! நீ ஏதோ குற்றம் செய்துவிட்டாய்"

2. துளசித்தாமர் இராமன் மகன் அடித்தமைக்கு யாது காரணம் கூறினர்?

3. துளசித்தாமர் தம் மனைவியாருக்குச் செய்த அறிவுரைகள் யாவை?

4. இக்கதையினைச் சுருக்கிப் பத்து வரிக்குக் குறையாது எழுதுக.

5. இக்கதையினை நடித்துக் காட்டுக.

## 6. சரியை வழிபாடு

சரியை என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? சரியை என்றால் 'ஒழுக்கம்' என்று பொருள்படும். சரியை என்பது வடசொல். நல்லவற்றைச் செய்து பழகுவது நல்லொழுக்கம் என்றும் தீயவற்றைச் செய்து பழகுவது தீயொழுக்கம் என்றும் சொல்வதுண்டு. நாம் நல்லொழுக்கத்தையே கடைப்பிடிக்க வேண்டும்.

நல்லொழுக்கம் மேற்கொள்ளாதவர் வாழ்வு பயனற்ற வாழ்வாகும். ஒழுக்கம் நமக்கு மேன்மையைத் தரும். ஒழுக்கத்தால் ஒருவர் உயர்வடையலாம்; எல்லோரும் போற்ற வாழலாம்; கல்வியில் சிறப்படையலாம்; புகழும் செல்வமும் அவரை நாடிவரும். தீயொழுக்கம் ஒருவருக்கு எக்காலத்திலும் துன்பமே தரும். ஆகவே, நாம் தீயொழுக்கங்களை விடுத்து நல்லொழுக்கத்தையே மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒழுக்கமுள்ளவர் செய்யும் வழிபாடே சிவபெருமானுக்கு ஏற்றது. சிவபெருமானும் அதையே விரும்புகிறார். ஆகவே, நல்லொழுக்கத்தையே நாம் வளர்க்க வேண்டும். நல்லவர்களுடன் கூடியே பழக வேண்டும். பட்டினத்தடிகள் நல்லோர் நட்பின் பயனை நன்கு அறிந்தவர். எனவேதான்,

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறுநிலை உளதோ."

என்று அவர் பாடியருளினர்.

சரியை வழிபாடு மூன்று வகைப்படும். அவை யாவன: (1)உள்ளத்தால் செய்வது; (2) சொல்லால் செய்வது;(3) உடம்பால் செய்வது. இம் மூவகைச் சரியை வழிபாட்டையும் நிறைவுபடச் செய்பவர் நற்பேறு பெறுவர்.

1. உள்ளத்தால் செய்வது: சிவபெருமானை எப்பொழுதும் நினைத்தல்; தான தருமங்களில் நினைவுகொள்ளல்; எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ளுதல்; உடம்பு, வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்பொறிகள் வழியாய்ச் செல்லும் ஐந்து ஆசைகளையும் வெளிச்செல்ல வொட்டாது அடக்குதல் முதலிய பலவாகும்.

2. சொல்லால் செய்வது: திருவைந்தெழுத்தை வாயால் ஓதுதல், உருத்திர மறையை ஓதுதல், நல்ல அறங்களைப்பற்றிப் பேசுதல், நல்ல பணிகளைச் செய்வதற்கும் பிறரிடம் வாய்விட்டு உரையாடுதல் ஆகிய பலவாகும்.

3. உடம்பால் செய்வது: சிவபெருமான் திருவுருவத்திற்கு மலரிட்டு வணங்குதல், திருக்கோயிலை வலம் வந்து பணிதல், சிவபெருமான் திருமுன் நிலத்தில் வீழ்ந்து வணங்குதல், கோயில் திருப்பணி செய்தல், திருவிளக்கேற்றுதல் முதலிய பலவாகும்.

உள்ளத்தால் செய்யப்படும் சரியை வழிபாட்டைக் கடைப்பிடித்தவர் பலருள்ளும் பூசலார் நாயனார் முதன்மையானவர். இவரின் தூய வழிபாட்டைக் கண்டு வியந்து சிவபெருமான் இவருக்கு அருள் புரிந்தார். உள்ளத்தில் இவர் அமைத்த கோயிலுக்கே சிவபெருமான் குடிபுகுந்தார்.

பூசலார் நாயனாரைப்போல நாமும் மூவகைச் சரியை வழிபாட்டையும் செவ்வனே செய்து இறைவன் திருவருள் பெறுவோமாக.

பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக:

(அ) சரியை என்றால் என்ன?

(ஆ) நல்லொழுக்கத்தால் ஏற்படும் நன்மைகள் நான்கு கூறுக.

(இ) நல்லொழுக்கம் பற்றிப் பட்டினத்தடிகள் கூறுவது என்ன?

(ஈ) சரியை வழிபாடு எத்தனை வகைப்படும்?

(உ) உடம்பால் செய்யும் சரியை வழிபாடு ஐந்து கூறுக.

(ஊ) உள்ளத்தால் சரியை வழிபாடு இயற்றிய நாயனார் யார்?

2 சரியை வழிபாடு பற்றி 10 வரிக்குக் குறையாது எழுதுக.

குறிப்பு:—பூசலார் நாயனாரைப் பற்றி உனது ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

## 7. ஆற்றிலிட்ட பொன் குளத்தில் மிதந்தது

திருமுனைப்பாடி என்ற நாட்டில் திருநாவலூர் என்ற ஊர் ஒன்று உண்டு. அந்த ஊரில் சைவ அந்தணர் குலத்தில் சடையனார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் பெயர் இசைஞானியார் என்பது. சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு நம்பியாரூரர் என்று பெயரிட்டுச் செல்வமாக வளர்த்து வந்தனர்.

திருமுனைப்பாடி நாட்டை நரசிங்க முனையரையர் என்ற அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். இவர் சடையனாரின் குழந்தை அழகாக இருப்பது கண்டு அதனைத் தன் வளர்ப்புப் பிள்ளையாக எடுத்துக்கொண்டார். நம்பியாரூரர் அரசருக்குரிய ஆடை அணிகளுடனும், அந்தணர் ஒழுக்கங்களுடனும் எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். ஆரூரர் அழகாக இருந்ததால், அவருக்குச் சுந்தரர் என்று பெயர் வழங்கலானார்கள்.

சுந்தரர் இறைவனிடத்திலே மிக்க அன்பு கொண்டார். திருத்துறையூர், திருவதிகை, தில்லை

சீர்காழி, திருப்புன்கூர், திருவாரூர் முதலிய திருப் பதிகளுக்குச் சென்று இறைவரை வழிபட்டார் திருவாரூரில் பரவையார் என்னும் எழில் மிக்க பெண்ணொருத்தியைக் கண்டு, அவள் அழகில் ஈடுபட்டு மணம் செய்துகொண்டார். குண்டை யூரில் பஞ்சம் ஏற்பட்டபோது, இறைவரின் பேர ருளால் சுந்தரர் நெற்குவியலைப் பெற்றார்.

பின்னர், சுந்தரமூர்த்திகள் திருப்புகலூர், திருப்பேரூர் முதலிய சிவப்பதிகளைக் கண்டு வழி பட்டு அதன் மேல் திருமுதுகுன்றம் வந்து அடைந் தார்-அவ்வூரில் எழுந்தருளியிருந்த சிவபெருமானை வணங்கிப் பதிகம் ஒன்றுபாடி-பன்னிரண்டாயிரம் பொன்னைப் பெற்றார். இறைவர் அருளாற்பெற்ற அந்தப் பொன்னைத் திருவாரூர்க் குளத்திலே அடையும்படி செய்ய வேண்டும் என்று வேண்டி னார்; மணிமுத்து என்ற ஆற்றிலே பொன் யாவை யும் இட்டார்.

சுந்தரர் ஒவ்வொரு சிவத்தலமாகச் சென்று வழிபட்டுக் கொண்டு, பல நாட்களின் பின் திருவாரூரை அடைந்தார். பரவையாரிடம் தான் திருமுதுகுன்றத்திலே ஆற்றிலிட்ட பொன் னைத் திருவாரூர்க் குளத்தில் யாவரும் கண்டு களிக்க எடுக்கப்போவதாகக் கூறினார். சுந்தரர் குளத்தில் ஒரு பக்கமாக இறங்கித் தண்ணீரில் கைவிட்டுத் தேடினார். பொன் கிடைக்கவில்லை.

பரவையாரும் மற்றவரும், "ஆற்றில் இட்ட பொன் குளத்தில் கிடைக்குமா?" என்று சொல்லிக் கைகொட்டி நகைக்கலானார்கள்.

சுந்தரமூர்த்திகள் மீண்டும் மீண்டும் தேடினார். கிடைக்காததால், "பொன் செய்த மேனியீர்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி இறைவனை வழிபட்டார். எட்டுப்பாட்டுக்கள் பாடி முடிந்ததும் குளத்தில் மீண்டும் தேடினார். என்னே சிவபெருமான் திருஅருள்! பொன் முழுவதும் சுந்தரர் கைக்குக் கிட்டியது. இந்நிகழ்ச்சியைக் கண்டு யாவரும் வியந்தனர். அவரின் பக்தியையும், மனஉறுதியையும் பாராட்டினர்.

நம்பியவரை ஆண்டவன் கைவிடுவதில்லை. அன்பர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது அன்றோ சிவபெருமான் செயல். அவரை நாமும் வழிபட்டு நற்பேறு அடைவோமாக.

## பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக:

(அ) சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே அவதாரம் செய்தார்?

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் தாய் தந்தையர் பெயர் யாது?

(இ) நரசிங்கமுனையரையர் என்பார் யார்?

(ஈ) சுந்தரமூர்த்தி நாயனார் யாத்திரை செய்த தலங்களில் ஐந்து எழுதுக.

(உ) சுந்தரர் சிவபிரானிடம் பொன் வேண்டிப் பெற்ற தலம் யாது?

2. சுந்தரமூர்த்தி நாயனார் நரசிங்கமுனையரையர் அரண்மனையில் எவ்வகையில் வளர்க்கப்பட்டார்?

3. சுந்தரர் திருமுதுகுன்றில் பெற்ற பொன்னைத் திருவாரூர்க்குளத்தில் எப்படி எடுத்தார்?

4. இக்கதையிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் கற்பனை யாது?

# 8. தேவாரம் III

(சுந்தரமூர்த்தி சுவாமிகள்)

(1)

## திருப்பாண்டிக் கொடுமுடி

திருமுனைப்பாடி என்ற நாட்டில், திருநாவலூரில் சைவ அந்தணர் மரபில் சுந்தரர் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சடையனுர்; தாயார் பெயர் இசை ஞானியார். திருமுனைப்பாடி நாட்டின் மன்னனுன நரசிங்கமுனையரையர் இவரைக் குழந்தைப் பருவத்தி லேயே தன் வளர்ப்புக் குழந்தையாக்கிக் கொண்டார்.

செயற்கரும் செயல் பல செய்து, இறைவரிடம் நீங் காத பற்றுக் கொண்டிருந்த சுந்தரர் உலகம் புகழ வாழ்ந்து, இறைவரின் அருள் பெற்ருர் பரவையார் என்னும் அம்மையாரை மணந்தார்.

திருவீங்கோய் முதலிய திருத்தலங்களுக்குச் சென்று, இறைவரை வணங்கி வந்த சுந்தரர் கொடுமுடிக்கோயி லுக்குச் சென்றபோது, திருவைந்தெழுத்தை என் நாவா னது மறவாது என்னும் குறிப்புப்பட இந்நமச்சிவாயப் பதிகம் பாடியருளினுர். இப்பாடல் 48 ஆம் பதிகத்தில் உள்ளது.

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப் பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்மறக் கினும்
சொல்லுநா நமச்சி வாயவே.

(பதவுரை) கற்றவர் - அறிவு நூல்களைக் கற்றுணர்ந்த அந்தணர்கள்; தொழுது - வணங்கி; ஏத்தும் - வாழ்த்துகின்ற; சீர் - சிறப்புப் பொருந்திய; கறையூர்-திருக் கறையூர்க்கண்ணுள்ள; பாண்டிக் கொடுமுடி - திருப் பாண்டிக் கொடுமுடித் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற; நல் தவா – நல்ல தவத்தையுடைய இறைவனே! உனை - உன்னை; நான் மறக்கினும் - சிலவேளை அடியேன் மறந்துவிட நேரிடினும்; நா - எனது நாவானது; நமச்சிவாய - நமச்சிவாய என்னும் உன் திருப் பெயரை; சொல்லும் - சொல்லி வாழ்த்தும்; (அதனால்) மற்று - வேறு; எனக்கு - அடியேனுக்கு; பற்று - அன்பு; இன்றி – இல்லாமல்; நின் - உன்னுடைய; திரு பாதமே- அழகிய திருவடிகளையே; மனம் - என் மனத்திடத்தே; பாவித்தேன் - பதித்துக்கொண்டேன்; பெற்றலும் - இத்தகைய உன் திருவடி மறவாத நிலையை நான் அடைதலும்; பிறந்தேன் - பிறந்த பயனைப் பெற்றேன்; இனி - இனிமேல்; பிறவாத - இறந்து பிறப்பெடுக்காத; தன்மை - நிலைமை; வந்து - வரப்பெற்று; எய்தினேன்- நல்ல நிலைமையைப் பெற்றேன்.

## (2)

## திருவாரூர்

இப்பதிகமும் சுந்தரர் அருளியது. இப்பாடல் 95 ஆம் பதிகமாகும். சுந்தரர் திருக்கச்சியேகம்பத்திலேயே, தம் இடக்கண் தெரியும்படி இறைவனால் தரப் பெற்றுத் திருவாரூரை அடைந்தார். அப்போது புற்றிடங் கொண்ட பெருமானைக் கண்டு வழிபட, ஒற்றைக் கண் போதாததால் மற்றொரு கண்ணும் தந்தருள வேண்டுமென்ற கருத்துப்பட இப்பதிகம் பாடியருளினார். இறைவன் இவர் வலக்கண்ணும் தெரியுமாறு அருளினார்

அப்போது இருகண்களாலும் இறைவனைப் பார்த்துப் பேரின்பமடைந்தார்.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரில்
வாழ்ந்து போதீரே.

(பதவுரை) மீளா - நீங்காத; அடிமை - அடிமைப் பட்டவனாகிய நான்; உமக்கே - உங்களுக்கே; ஆள் ஆய் - ஆட்பட்டு; பிறரை - வேறு எக்கடவுளர்களையும்; வேண்டாதே - விரும்பாமல்; மூளா - விறகில் நன்கு பற்றாத; தீ போல் - நெருப்பைப்போல; உள்ளே - உள்ளிடத்தே; கனன்று - கொதிப்புக்கொண்டு; முகத்தால் - தன் முகத்திடத்து; மிக - மிகுதியாக; வாடி - அதனால் வாட்டங்கொண்டு; ஆளாய் - ஊழியராக; இருக்கும் - இருக்கின்ற; அடியார் - உம் அடித்தொண்டர்கள்; தங்கள் - தம்முடைய; அல்லல் - துன்பங்களை; சொன்னக்கால் - சொல்வார்களானால்; வாளா - சும்மா; அங்கு - தாம் இருக்கின்ற அந்த இடத்திலேயே (சிறிதும் அசைவில்லாமல்); இருப்பீர் - இருக்கின்றவரே!; திருவாரூரீர் - திருவாரூருக்குரியவரே! வாழ்ந்து போதீரே - நீர் நன்றாக வாழ்ந்திரும்; (நாங்கள் அல்லற்பட்டுக் கொண்டே இருக்கிறோம்; இதுதான் பேரருளோ?)

## (3)

## திருமறைக்காடு

இதுவும் சுந்தரர் பாடியருளியது. திருமறைக்காடு (வேதாரணியம்) என்னும் ஊரின் கண் எழுந்தருளி யிருந்த இறைவனைப் பாடி மகிழ்ந்தது. இஃது 71வது பதிகத்தில் உள்ள ஒரு பாடல்.

யாழைப்பழித் தன்னமொழி
மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை
வைத்தான் இடம்பேணில்
தாழைப்பொழில் ஊடேசென்று
பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங்
குண்ணும் மறைக்காடே.

(பதவுரை) யாழ் - யாழ் என்னும் இசைக் கருவி யின் இனிய ஒலியை; பழித்த அன்ன - இகழ்வதைப் போலிருக்கின்ற; மொழி - சொற்களையுடைய; மங்கை- உமையம்மையாரை; ஒரு பங்கன் - ஒரு பாகத்தில் கொண்டவனும்; பேழை - பெருமை பொருந்திய; சடை- சடையினது; முடி - உச்சி; மேல் - மீது; பிறை-மூன் றாம் பிறையை; வைத்தான் - வைத்திருக்கின்றவனுமான சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற; இடம்-திருத் தலமாவது; பேண் இல் - மதிக்க இயலாத; தாழைப் பொழில் - மிக அடர்ந்துள்ள தென்னஞ் சோலையிடத் தின் ; ஊடே - நடுவே; சென்று - போய்; பூழை (அச் சோலையில்) வெளியாக இருக்கும்; தலை - இடத்திலே; நுழைந்து - தாவி நுழைந்து சென்று; கூழை - குள்ள மான (சிறிய); குரங்கு - குரங்குகளானவை; வாழைக்

கனி - வாழைப் பழத்தை; உண்ணும் - தின்னுகின்ற; மறைக்காடு - திருமறைக்காடு என்னும் நகரமாகும்.

## பயிற்சியும் வினுக்களும்

1. (அ) "மற்றுப்பற்றெனக்கின்றி......" என்று தொடங்கும் தேவாரத்தினை வரிபிழையாது எழுதுக.
   (ஆ) இத்தேவாரம் யாரால் எவ்விடத்துப் பாடப்பட்டது?
   (இ) பாடலின் பொருளைச் சுருக்கி எழுதுக.
   (ஈ) திருவைந்தெழுத்து யாது?

2. (அ) "மீளா அடிமை..." என்ற முதலையுடைய பாடலை எழுதுக.
   (ஆ) இத்தேவாரம் எவ்விடத்து யாரால் பாடப்பட்டது?
   (இ) பாடிய சந்தர்ப்பம் யாது?
   (ஈ) பாடலின் பொருளைச் சுருக்கி எழுதுக.

3. (i) "யாழைப்பழித்தன்னமொழி..." என்ற முதலையுடைய தேவாரம் யாரால் எவ்விடத்துப் பாடப்பட்டது?
   (ii) இத்தேவாரத்தில் இறைவன் வடிவம் எப்படிக் கூறப்படுகின்றது?
   (iii) தேவாரத்தின் கடைசி இரண்டு அடிகளிலும் கூறப்படும் பொருள் யாது?
   (iv) பொருள் எழுதுக:

| | |
|---|---|
| பழித்த ——— | பங்கன் ——— |
| பேழை ——— | தாழை ——— |
| பூழைத்தலை ——— | கூழை——— |
| மறைக்காடு ——— | |

## 9. சிவபெருமான் மாமனாய் வந்து வழக்குரைத்தது

நான்மாடக்கூடல் என்ற சிறப்புப் பெற்ற மதுரை மாநகரில் வணிகரிலே சிறந்தவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் தனபதி. அவன் அளவற்ற செல்வம் படைத்திருந்தான். அவன் மனைவியின் பெயர் சுசீலை. இருவரும் இன்பமாக இல்வாழ்க்கை நடத்திய போதிலும், மகனில்லாத குறையொன்று இவர்களைவாட்டியது. இக்குறையை நீக்கக் கருதித் தன் தங்கை மகனைத் தன் மகனாகக் கொண்டான். அவனைப் பேரன்புடன் வளர்த்து வந்தான்.

தனபதி தன் மனைவியுடன் மிக்க அன்பு கொண்டு இருந்தான் இதைக்கண்ட தனபதியின் தங்கைக்குப் பொருமை தூண்டியது. இதனால் தனபதியிடம் அடிக்கடி சண்டையிடலானாள். ஒருநாள் தன் அண்ணனைப் பார்த்து, "நீ பிள்ளைப் பேறு இல்லாத பாவியாக இருக்கிறாய்; என் மகனை உன் மகனாக ஏற்றுக்கொண்டதனால் தான் நீ இம்மை மறுமைப் பயன்களை அடையப் போகிறாய்" என்று கடிந்து கூறினாள்.

இதைக் கேட்டதும் தனபதிக்கு வருத்தம் மிகுந்தது. இப்பிறவியில் இல்லையென்றாலும் அடுத்த பிறவியிலாவது ஒரு மகனைப் பெற வேண்டும்;" என்று கருதித் தன் இல்லாளுடன் ஒரு காட்டுக்குச் சென்றான். போகும்பொழுது தன்

செல்வம் முழுவதையும் தான் வளர்த்து வந்த தங்கை மகனுக்கே உரிமையாக்கிவிட்டுப் புறப் பட்டான்.

தவத்திற்குச் சென்ற தனபதி பல ஆண்டுகள் காட்டைவிட்டு நகருக்கு வராமலிருந்தான். இதை அறிந்த தனபதியின் பங்காளிகள், 'தனபதி இறந் திருப்பான்' என்று கருதி, தனபதியின் செல்வ மெல்லாம் தங்களுக்கே உரிமையுடையது என்று கூறிக் கவர்ந்து கொண்டனர்.

தனபதியின் தங்கை மிகவும் வருந்தினுள். மனம் புண்படும்படி அண்ணனை ஏசி விட்டோமே என்று மனம் நொந்தாள். 'வளமாக இருக்க வேண் டிய நாம் இப்படி வறுமையில் தளர்கிறோமே', என்று பெரிதும் கண்ணீர் விட்டுக் கதறினுள். முடிவாகத் 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்று எண்ணிக் கூடலிறைவரை வணங்கி வழி பட்டாள்.

அன்று தனபதியின் தங்கையின் கனவில் சிவ பெருமான் ஓர் அந்தணராகத் தோன்றினுர். அற மன்றத்திற்கு வழக்காடும்படி அறிவுறுத்தி மறைந்தருளினுர். அவள் கனவில் நிகழ்ந்ததை எண்ணிச் சிறிது மனம் தேறினுள். மறுநாள் பொழுது விடிந்ததும் பொருளெல்லாவற்றையும் கவர்ந்து சென்ற தனபதியின் பங்காளிகளைத் தடுத்து அறமன்றத்திற்கு வருமாறு கூறினுள். அவர்கள் அவள் சொல்லைத் தட்டிக்கழித்துவிட் டுச் சென்றுவிட்டனர்.



சிவபெருமான் மாமனாக வந்து வழக்குரைத்தல்

தனபதியின் தங்கை அறமன்றத்தில் முறையிட்டாள். செல்வத்தைக் கவர்ந்தவர்களை அறமன்றத்திற்கு வருமாறு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அவ்வாறே ஆணையிட யாவரும் வந்து சேர்ந்தனர். அதே சமயம் இறைவராகிய சிவபெருமான் தனபதியைப்போல் உருவங்கொண்டு அறமன்றத்தை அடைந்தார். தங்கையையும் வளர்ப்பு மகனையும் அன்புடன் அணைத்துக்கொண்டார். "இந்நிலை ஏன் வந்தது?" என்று கூறிக் கண்ணீர்விட்டார்.

செல்வத்தைக் கவர்ந்த பங்காளிகள் இவர் தனபதி அல்லவென்றும் அவர் செல்வம் தங்களுக்கே உரிமையுடையது என்றும் வழக்காடினர்கள். ஆனால், இறைவரோ தானே தனபதி என்று எல்லோரும் உணரும்படியாக அவர்கள் கேட்ட வினாக்கள் யாவற்றிற்கும் தக்க பதில் அளித்தார். தன் செல்வ நிலையையும் உறவினர் யாவரின் பெயர்களையும் உணர்ந்தவர் போலக் கூறினார். அறமன்றத்தார் அவரே தனபதி என்று கூறி, அவர் வேண்டுகோளின்படியே செல்வம் அனைத்தையும் தங்கை மகனுக்கே உரிமையாக்கி எழுதினார்.

வழக்கு முடிந்ததும் பங்காளிகள் ஒவ்வொருவராகப் பதுங்கிச் சென்றனர். ஆனால், தனபதியாக வந்த இறைவரோ அங்குள்ளோர் யாவரும் காணுமாறு திடீரென மறைந்து மதுரைத் திருக்கோயில் புகுந்தார். இந் நிகழ்ச்சியைக் கண்கூடாகக் கண்ட பாண்டிய மன்னரான சிவபாத

சேகரன் இறைவரிடம் நீங்காப் பற்றுக்கொண்டு, தன் மகனுக்குப் பட்டஞ் சூட்டி விட்டு இறைவர் அருள் நிழல் அடைந்தார்.

## பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக.
   (அ) மதுரைக்கு வழங்கும் இன்னோர் பெயர் தருக.
   (ஆ) தனபதி வணிகரின் மனைவியார் பெயர் யாது?
   (இ) தனபதிக்கிருந்த பெருங்குறை யாது?
   (ஈ) தனபதியின் தங்கை அண்ணனிடம் பொறாமை கொள்ளக் காரணம் என்ன?
   (உ) தனபதி ஏன் காட்டுக்குச் சென்றான்?
   (ஊ) தனபதி தன் செல்வங்களை யாருக்கு உடைமை யாக்கினான்?
   (எ) தனபதியின் தங்கை கண்ணீர்விடக் காரணம் என்ன?
   (ஏ) தனபதியின் தங்கை யார் தூண்டுதலின் பிரகாரம் அறமன்றம் சென்றார்?
   (ஐ) அறமன்றத்தில் தனபதியின் தங்கை பக்கம் நின்று வாதிட்டவர் யார்?
   (ஒ) தனபதி வாழ்ந்த காலத்தில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் பெயர் யாது?
2. தனபதியின் மனம் வருந்தத் தங்கை கூறிய வார்த்தை எது?
3. தனபதியின் சகோதரியும் மகனும் இழந்த பொருள்களை மீண்டும் பெற்ற முறைமையினைச் சுருக்கிக் கூறுக.
4. மாமனாக வந்து வழக்குரைத்த இறைவர் எம்முறையில் வழக்கில் வெற்றி கண்டார்?
5. இக்கதையை நடித்துக் காட்டுக.

## 10. கோயிலைச் சுத்தம் செய்தல்

சிவபெருமான் அருளைப் பெற்று அவர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களுக்குச் செல்லுகின்றோம். அவர் திருமுன் நின்றும் நிலத்தில் வீழ்ந்தும் வணங்குகின்றோம். வாயார அவர் திருப்பெயர்களையும் திருவைந்தெழுத்தையும் ஓதுகின்றோம். என்றாலும், அவர் வீற்றிருக்கும் திருக்கோயிலை நாம் தூய்மை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'அன்பே சிவம்' என்று ஆன்றோர் கூறுவர். அந்த அன்பும் தூய்மையில்தான் தோன்றமுடியும். தூய்மை அகத்தூய்மை, புறத்தூய்மையாக வைத்திருந்தாலும், நம் உடலையும் தூய்மையாக வைத்திருக்கிறோமல்லவா? அதேபோல இறைவன் உறைவிடமாகிய திருக்கோயிலையும் தூய்மையாக இருக்க வழிசெய்தல் வேண்டும்.

நாள்தோறும் குறிப்பிட்ட காலத்தை வரையறை செய்து கோயிலைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். கோயிலுக்குள் சிந்திக் கிடக்கும் குப்பை கூளங்களையும், காக்கை முதலிய பறவைகளும் நாய், பூனை முதலிய மிருகங்களும் இட்டிருக்கும் எச்சங்களையும் அகற்ற வேண்டும்.

ஒரு குடத்தில் நீர் மொண்டு, கோயில் முழுதும் தெளித்தல் வேண்டும். திருக்கோயில் திண்ணைகளையும், மேடைகளையும் நீர் விட்டுக்

கழுவவேண்டும். மண்தரை ஆயின் நல்ல பசு வின் சாணத்தைக்கொண்டு வந்து நீரிற் கரைத்து தூயவெள்ளைத் துணியில் நனைத்து மெழுகவேண் டும். அரிசி மாவினுல் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும்.

இவ்வாறு திருக்கோயிலைத் தூய்மை செய்து வருவோமாயின் இறைவனருளை எளிதிற் பெற லாம். இத்தகைய திருத்தொண்டை மேற்கொண்டு பயன் மிகப் பெற்றவர் பலராவர். அவருள் தலை சிறந்தவர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவ ரான அப்பர் பெருமானுவர். அவர் சகோதரியா ராகிய திலகவதியாரும் பெண்ணினத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆவர்.

அப்பர் திருக்கோயிற் பணியை மனமுவந்து செய்துவந்தார். பிறரும் அவ்வாறு செய்து இறைவன் அருளைப் பெறவேண்டுமென்று அவர் விரும்பினுர். இதனுலேயே தாம் பாடியருளிய திரு வாரூர்த் திருத்தாண்டகத்தில் திருக்கோயில் சுத் தம் செய்யும் வழி முறைகளை விளக்கிப் பாடியுள் ளார். அது வருமாறு:

திருச்சிற்றம்பலம்

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா! சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே"

## பயிற்சியும் வினாக்களும்

1. கடவுளிடத்து நாம் நமது அன்பைச் செலுத்தும் வழிகள் மூன்று கூறுக.

2. அகத்தூய்மையால் யாது தோன்றும்?

3. கோயிலைத் தூய்மைப் படுத்தும் வழிகள் இரண்டும் எவை?

4. திருக்கோயிலைத் தூய்மைப் படுத்தும் பணியை மேற்கொண்டாரில் தலை சிறந்தார் இருவர் பெயர் தருக.

5. கோலம் இடும்பொழுது ஏன் அரிசிமா உபயோகித்தல் வேண்டும்?

6. ''நிலைபெறுமாறெண்ணுதியேல்...'' என்ற தேவாரத்தை எழுதுக.

7. இத்தேவாரத்தில் கூறப்பட்ட கருத்தினைச் சுருக்கமாகக் கூறுக அல்லது எழுதுக.

குறிப்பு : அப்பர் சரிதையை ஆசிரியர் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொள்க.

# 11. திருவாசகம்

(மாணிக்கவாசகர்)

(1)

## வாழாப்பத்து

இது திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் அருளியது. மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டிலே யுள்ள திருவாதவூரிலே பிறந்தவர். இவர் தந்தையார் சம்பு பாதாசிரியர் என்றும், தாயார் சிவஞானவதி என்றும் கூறுவர். பாண்டிய மன்னன் இவர் பெருமையையும், அறிவுத் திறத்தையும் அறிந்து, தன் அமைச்சராக்கிக் கொண்டான். குருந்த மர நீழலில் இறைவரால் இவர் ஆட்கொள்ளப் பெற்ருர்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானுல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

(பதவுரை) பாரொடு - இம்மண்ணுலகத்துடனே; விண் ஆய் - வானுலகமாகவும்; பரந்த - விரிந்த; எம்- எம்முடைய; பரனே - (யாவருக்கும்) மேலானவனே; நான் - அடியேன்; பற்று - பற்றுதலான இடம்; மற்று - உன்னையன்றி வேறே; இலேன் - இல்லாது

இருக்கின்றேன்; கண்டாய்-அறிவாயாக; சீரொடு-சிறப்போடு; பொலிவாய் - விளங்குவோனே; சிவபுரத்து - சிவபுரத்துக்கு; அரசே - மன்னனே! திருப்பெருந்துறை உறை - திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற; சிவனே-சிவபெருமானே; யாரொடு - நான் வேறு எவருடனே; நோகேன் - என் அல்லலைக் கூறி வருந்துவேன்; ஆர்க்கு - உன்னையன்றி வேறு எவருக்கு; எடுத்து உரைக்கேன் - விளக்கத்தோடு சொல்லுவேன்; ஆண்ட நீ - என்னைத் தடுத்தாட்கொண்டருளிய நீயே; அருளிலை ஆனால் - அருளாது விட்டுவிடுவாயானால்; வார் - நீண்ட; கடல் - கடல் சூழ்ந்த; உலகில் - இம்மண்ணுலகத்திலே; வாழ்கிலேன் - வாழ்ந்திருக்கமாட்டேன்; கண்டாய் - அறிந்தருளுவாயாக; வருக என்று - அடியேனை நின்பால் வருவாயாக என்று கூறி அழைத்து; அருள் புரிவாய் - உன் திருவருளைச் செய்தருள்வாயாக.

## (2)

## பிடித்தபத்து

இதுவும் மாணிக்கவாசகர் பாடியருளியது. திருத்தோணிபுரத்திலிருந்து அருளியது. முத்திக் கலப்புரைத்தல்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(பதவுரை) அம்மையே - எனக்குத் தாயானவளே; அப்பா - எனக்குத் தந்தையானவனே!; ஒப்பு இலா - உவமைசொல்ல இயலாத; மணியே - ஒளிமிக்க மாணிக்கமே! அன்பினில் - அன்பின் இடத்தே : விளைந்த - உண்டாகிய; ஆம் - நிறைந்த; அமுதே -; அமிழ்தமே ; பொய்ம்மையே - பொய்யான நிலையற்ற செயல்களையே; பெருக்கி - பெருகச் செய்து; பொழுதினை - என் வாழ்நாளை; சுருக்கும் - வீண் நாளாகக் கழிக்கும் ; புழுத்தலை - அழுக்குப் படிந்த தலையையுடைய; புலையனேன் தனக்கு - இழிந்தவனான எனக்கு; செம்மையே ஆ - சிறந்ததாக உள்ள ; சிவபதம் - வீட்டுநெறிப் பக்குவத்தை; அளித்த - கொடுத்தருளிய; செல்வமே - அரும்பொருளானவனே; சிவபெருமானே - சிவபெருமான் என்னும் திருப்பெயர் கொண்டவனே; இம்மையே - இப்பிறவியிலேயே; உன்னை - அருட்கடலாகிய உன்னை ; சிக்கென - விரைவாக; பிடித்தேன் - அடியனேன் மனத்திடத்தே இருத்திக்கொண்டேன்; இனி - இனிமேல்; எங்கு - என் மனத்தைவிட்டு வேறு எந்த இடத்திலே; எழுந்தருளுவது - நீ போய்த் தங்கியிருப்பது; (சொல்வாயாக; இனி உன்னை விடமாட்டேன்.)

## (3)

## அருட்பத்து

இப்பாடலும் மாணிக்கவாசகரால் திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பெற்றதாகும்.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
தருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியும் காணேன்

திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(பதவுரை) நிருத்தனே - அருட் கூத்தாடுவோனே! நிமலா - அறியாமையாகிய மலமற்றவனே! நீற்றனே - திருநீறணிந்தவனே! நெற்றி - நெற்றியினிடத்திலே தோன்றியிருக்கின்ற; கண்ணனே - கண்ணையுடையவனே! விண் உளோர் - வானுலகத் தேவர்கட்கு; பிரானே - தலைவனே!; ஒருத்தனே - உவமையற்றவனே!; உன்னை - இத்தகைய பெருமைபெற்ற உன்னை; ஓலம் இட்டு - அடைக்கலமாக வேண்டி அழைத்து; அலறி - அழுது; உலகு எலாம் - எல்லா உலகத்திலும் தேடியும் - தேடிப்பார்த்தும்; காணேன் - கண்டேனில்லை; திருத்தம் ஆம் - அழகுள்ள; பொய்கை - தடாகத்தையுடைய; திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்திடத்தேயுள்ள; செழு - செழிப்புள்ள; மலர் - பூக்களையுடைய; குருந்தம்-குருந்தமரத்தினடியிலே; மேவிய - எளியேனை ஆட்கொள்ள எழுந்தருளியிருந்த; சீர் - சிறப்புடைய; அருத்தனே - உண்மைப் பொருளாக உள்ளவனே! அடியேன் - உம் அடித்தொண்டனாகிய நான்; ஆதரித்து - விருப்பங்கொண்டு; அழைத்தால்-உன்னைக் கூப்பிட்டால்; அது - அவ்வாறு அழைப்பது; எந்து - எதற்கு; என்று - என்று கேட்டு வந்து; அருளாயே - அருள்செய்தல் கூடாதா? (அருளாளா! இது உனக்குத் தகாதா? எளியேனுக்கு அருள் புரிவாயாக.)

## பயிற்சியும் வினுக்களும்

1. (அ) திருவாசகம் யாரால் பாடப்பட்டது?
   (ஆ) வாழாப்பத்து எவ்விடத்தில் அருளிச் செய்யப் பட்டது?
   (இ) மாணிக்கவாசகரின் தாய்தந்தையரின் பெயர் யாது?
   (ஈ) "பாரொடுவிண்ணுய் ........." என்ற திருவாசகத்தின் பொருளைச் சுருக்கி எழுதுக.

2. (அ) "அம்மையே அப்பா ......" என்ற முதலையுடைய திருவாசகத்தை வரிபிழையாது எழுதுக.
   (ஆ) இத்திருவாசகப் பாடல் எவ்விடத்தில் அருளிச் செய்யப்பட்டது?
   (இ) இத்திருவாசகப் பாடலுக்குப் பிடித்தபத்து என்று பெயர் இடக்காரணம் என்ன?

3. (i) "நிருத்தனே நிமலா ........" என்ற திருவாசகப்பாடலை வரிபிழையாது எழுதுக.
   (ii) இத்திருவாசகப் பாடல் அருளிச் செய்யப் பட்ட இடம் யாது?
   (iii) இப்பாடலில் இறைவன் எப்பெயர்களால் அழைக்கப்படுகிருர்.

4. பொருள் எழுதுக:
   நிருத்தன்—— நிமலன்—— பிரான்——
   குருந்தம்—— அருத்தன்—— அதந்துவே——
   பரன்—— மணி—— பொழுது—— சிக்கென——

குறிப்பு: மாணிக்கவாசகரைப் பற்றி உமது ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

# 11. சிவபெருமான் பொதிசோறு கொடுத்தது

சிவபெருமானிடம் நீங்காத அன்பு கொண்டு தொண்டாற்றி அவர் அருள் பெற்றவர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்தவர்களாகக் கருதப்படும் தொண்டர்கள் நால்வர் ஆவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் என்பது அவர்கள் பெயர். இந்நால்வரையும் 'சமய குரவர் நால்வர்' என்று சிறப்பாகக் கூறுவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றை நீங்கள் முன் ஒரு பாடத்தில் படித்தீர்கள். அவர் செய்த அற்புதங்கள் பல. அதனால் மக்களிடையே நல்ல மதிப்பு அடைந்தார். சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்றார். இவருக்குத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தபோது, இறைவர் இவரைத் தடுத்து ஆட்கொண்டார். சிவபெருமான் முதிய அந்தணர் வடிவம் தாங்கி வந்தபோது, சுந்தரர் அவருடன் வன்மைபேசி வாதிட்டார். அதனால் இவருக்கு வன்தொண்டர் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

திருமுதுகுன்றத்தில் இறைவர் அருளால் கிடைத்த பொன்னை மணிமுத்தாறு என்னும் ஆற்றில் வீசி எறிந்துவிட்டு, திருவாரூர்த்திருக்குளத்தில் அதனைத் தேடி எடுத்தார். இவ்வரலாற்றை முன் ஒரு பாடத்தில் படித்தீர்கள். இதற்

குப் பின் திருவாரூரிலேயே பரவையாருடன் பல நாள் வாழ்ந்து வரலானார்.

சில நாட்கள் திருவாரூரிலேயே தங்கியிருந்த பிறகு, ஒருநாள் பல சிவத் தலங்களை வழிபட்டு வரப் புறப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலில் திருநள்ளாறு என்னும் சிவத்தலத்தை அடைந்தார். அங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருந்த சிவபெருமானை வணங்கிக்கொண்டு திருக்கோலக்கா என்னும் சிவதலத்தைச் சென்று அடைந்தார். இத்தலத்தை அடையும் சமயத்தில் சிவபெருமான் இவருக்குக் காட்சி தந்து அருளினார்.

அதன்மேல் இறைவரின் அருளை இன்னிசைப் பாடல்களால் பாடிக்கொண்டு சீர்காழிக்குச் சென்றார். சீர்காழிப் பெருமானை வழிபட்டுவிட்டுத் திருக்குருகாவூர் என்னும் சிவத்தலத்தை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தார்.

இடைவழியில் நெடுந்தூரம் சிறு காடாக இருந்தது. வீடுகளோ, ஊரோ இல்லை. மக்கள் நடமாட்டமும் இல்லை. சுந்தரருக்குப் பசி மிகுந்தது. நீர் வேட்கையும் அதிகமாயிற்று. இதனால் அவர் மிகவும் களைத்துப்போனார். சிவபெருமான் இவர் நிலைமையை அறிந்தார். வரும் வழியில் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தல் ஒன்றை அமைத்தார். தானே ஒரு வேதியரைப்போல் வேடந் தாங்கிப் பொதி சோற்றையும், குளிர்ந்த நீரையும் வைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

தள்ளாடிக் களைத்துச் சோர்ந்து நடந்து வந்துகொண்டிருந்த சுந்தரர் தண்ணீர்ப் பந்தலைக் கண்டார்; மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.



தண்ணீர்ப் பந்தலுக்குச் சுந்தரர் வருதல்

அந்தணர் வடிவில் இருந்த சிவபெருமான் சுந்தரரைப் பார்த்து,"மிகவும் சோர்ந்து விட்டீர்கள்; உங்கள் அடியவர் திருக்கூட்டத்துடன் இங்கு தங்கியிருங்கள்; பொதிசோறு இருக்கின்றது; நீர் இருக்கின்றது; வேண்டிய அளவு உண்டு, உங்கள் சோர்வைப் போக்கிக் கொள்ளுங்கள்;" என்று அன்புடன் கூறினார்.

அந்தணர் மொழியைத் தட்டாமல் சுந்தரர் இசைந்தார். தன் அடியவர்களுடன் பொதி

சோற்றை உண்டார்; நீர் பருகினர். பின்னர், சிறிது நேரம் யாவரும் கண்ணயர்ந்தனர். உறக்கம் கலைந்து எழுந்த சுந்தரர் தண்ணீர்ப்பந்தல் அங்கு இல்லாதது கண்டார். அன்புடன் அமுதளித்த அந்தணர் பெருமானும் அங்கு இல்லை. சுந்தரர் திடுக்கிட்டார். இவை யாவும் இறைவன் அருளே என்று வியந்தார்.

துன்பம் வந்தபோது அதைத் தீர்க்கும் எம் பெருமானர் கருணையன்றோ கருணை! 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்ற முதுமொழி உண்மையாயிற்று.

### பயிற்சியும் வினுக்களும்

1. சுருக்கமான விடை தருக:
   (அ) சமய குரவர் நால்வரும் யாவர்?
   (ஆ) சுந்தரரைக் குறிக்கும் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.
   (இ) சுந்தரரிடம் விளங்கிய அற்புதங்கள் இரண்டு தருக.
   (ஈ) பரவையாரைச் சுந்தர மூர்த்தி நாயனர் மணந்த இடம் யாது?
   (உ) சுந்தரர் தல யாத்திரையின் போது சிவபெருமான் காட்சி கொடுத்த தலம் யாது?
   (ஊ) சுந்தரர் எத்தலம் நோக்கிச் சென்ற பொழுது களைப்படைந்தார்?
2. சுந்தரர் களைப்படைந்த போது சிவபெருமான் பொதி சோறு கொடுத்தமை பற்றி ஐந்து வரிக்குக் குறையாது எழுதுக.
3. இக்கதையிலிருந்து நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினை யாது?

# 13. பூந்தோட்டத் தொண்டு

நாள்தோறும் சிவபெருமானுக்குக் காலை முத லாக ஆறு சிறுபொழுதுகளில் வழிபாடுகள் நிகழ் வதைக் காண்கிறோம். அவ்வக் காலங்களுக்கு ஏற்றபடி பூமாலை, பூங்கண்ணி, தலைமாலை முதலிய வற்றை அணிந்து அவரை வழிபட வேண்டியது நம்கடமையாகும். ஆகவே, அதற்குரிய மலர்த் தோட்டத்தை அமைக்க வேண்டும்.

பூந்தோட்டம் கோயிலுக்குப் பக்கத்திலேயே அமைத்தல் வேண்டும். அதில் இறைவருக்கு வேண்டிய முல்லை, மல்லிகை, இருவாட்சிச், செடி கொடிகளை வைத்து வளர்த்தல் வேண்டும். வில்வ மும் சிவபெருமானுக்கு ஏற்ற மரமாகும்.

பூந்தோட்டம் எவ்வாறு அமைப்பது? முத லில் நிலத்தை ஆழமாக உழவேண்டும். அப்பால், அந்நிலத்தைப் பண்படுத்திக் கொத்துதல் வேண் டும். ஆட்டுப்பிழுக்கை, காய்ந்த எரு, கரம்பை, கடலை, பிண்ணுக்கு முதலிய உரங்களை ஒன் ருகக் கலந்து நிலத்தில் தூவிவிட வேண்டும். பின்னர், செடி கொடிகளுக்கு ஏற்றபடி பாத்தி கட்டித் தண்ணீர் தெளித்து அவற்றை நடுதல் வேண்டும்.

இவ்வாறு நடப்பட்ட செடிகொடிகள் பத்து நாட்களில் தளிர்த்துத் துளிர்விடும். பின்பு நாட் கள் ஆக ஆக இலைகள் விட்டுக் கிளைத்து வளரும்.

கிட்டத் தட்ட நான்கு அல்லது ஐந்து மாதங்களில் அரும்புகள் தோன்றி நறுமணங் கமழும் மலர்கள் மலரும். பற்பல வண்ணங்களில் மலர்ந்துள்ள பலவகையான மலர்களையும் பூந்தோட்டத்தில் காணும் காட்சி வியப்புக்குரியதாக இருக்கும்; மனத்திற்கு மகிழ்ச்சியையும் தரும். இறைவனே இயற்கை வடிவாய் நம் கண் முன் தோன்றிக் காட்சியளிப்பது போல் இருக்கும்.

இம்மலர் வகைகளைப் பூக்குடலைகளில் பறித்துக் கொண்டு வந்து இறைவருக்கு உகந்த மாலைகளைக் கட்டிக் கொடுத்து அணிதல் வேண்டும். தனிப் பூவாக வைத்து அர்ச்சனையும் செய்து சிவ பெருமானை வழிபடலாம். விலைக்குக் கடைகளில் மலர்களை வாங்கித் தொடுத்தோ மாலைகளாக வாங்கியோ இறைவருக்கு அணிவதைவிட, நாமே பூந்தோட்டம் அமைத்து அன்றன்று மலர்ந்த புத்தம் புதிய மலர்களால் மாலை கட்டி அணிந்து வழிபடுவதே சிறந்தது ஆகும். அதனையே இறைவரும் உவந்து ஏற்றுக் கொள்வார்.

சிவபெருமானுக்கு உண்மைத் தொண்டராக விளங்க விரும்புவோர் பூந்தோட்டத் தொண்டு செய்து அவர் திருவருளைப் பெற்று மகிழ்வாராக.

## பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக :

(அ) ஒரு நாள் எத்தனை சிறு பொழுதுகளைக் கொண்டது.

(ஆ) பூந்தோட்டம் பெரும்பாலும் எங்கே அமைக்கப்படல் வேண்டும்?

(இ) பூந்தோட்டத்தில் நாட்டப் பெறும் செடி கொடிகளில் பத்தின் பெயர் தருக.

(ஈ) பூஞ்செடிகள் நாட்டி எவ்வளவு காலத்தில் மலர்கள் பறிக்கலாம்?

(உ) பூந்தோட்டத்தில் மலர்ந்துள்ள மலர்களின் காட்சி நமக்கு எதனை ஞாபகப்படுத்தும்?

2. பூந்தோட்டத்திற்கு உபயோகிக்கக் கூடிய பசளைகள் எவை?

3. விலைக்கு வாங்கி அணிகின்ற மலர்களை இறைவன் ஏன் அதிகம் விரும்புவதில்லை?

4. நீர் ஒரு பூந்தோட்டத்தை எவ்வாறு ஆக்குவீர் என்பதைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

5. பூந்தோட்டத்தில் திருந்தம் நடைபெறவேண்டிய வேலைகள் பற்றி ஓர் அட்டவணை தயாரிக்குக.

# 14. கந்தபுராணம்

## (1)

## முருகப்பெருமான் வணக்கம்

இது கச்சியப்ப சிவாசாரியாரால் அருளிச் செய்யப்பெற்றது. கந்தபுராணத்தில் உள்ள வள்ளியம்மை திருமணப் படலத்தின் இறுதிப்பகுதியில் ஆசிரியரே முருகப்பெருமானை வணங்குகின்ற முறையில் இப்பாடல் பாடப் பெற்றதாகும். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் காளத்தியப்ப சிவாசாரியார். இவர் தேவார திருவாசகங்களையும் வேதாகமங்களையும் ஓதியுணர்ந்தவர். சுப்பிரமணியர் உபாசனை உடையவர்.

புன்னெறி அதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி
இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி.

(பதவுரை): புன்னெறி அதனில் – தீய வழிகளிலே; செல்லும்-போகின்ற; போக்கினை - குற்றத்தை, விலக்கி - நீக்கி; மேல் ஆம் - மேன்மையான; நல்நெறி - நல்வழிகளிலே; ஒழுகச் செய்து - நடக்கும்படி செய்தருளி; நவை அறு - குற்றமற்ற; காட்சி - திருவுருவத்தைக் கண்டு களிக்கும் பேற்றை; நல்கி – தந்தருளி; என்னையும் - ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும்; அடியன் -

திருவடித் தொண்டனாக; ஆக்கி - ஆகச் செய்து, இருவினை - நல்வினை தீவினைகளாகிய இருவினைகளையும்; நீக்கி - விலக்கி; ஆண்ட - அடிமைகொண்டருளிய; பன்னிரு - பன்னிரண்டு; தடம் - உயர்ந்த; தோள் - திருத்தோள்களையுடைய; வள்ளல் - அருட்கொடைஞரண முருகப் பெருமானுடைய; பாத - திருவடிகளாகிய; பங்கயங்கள் - செந்தாமரை மலர்கள்; போற்றி - நம்மைக் காத்தருள்வதாக.

## (2)

## கந்தபுராண வாழ்த்து

[இப்பாடல் கந்தபுராணத்தில் வாழ்த்துப் பகுதியில் வந்துள்ளது. இதுவும் கச்சியப்ப சிவாசாரியாரால் பாடியருளிச் செய்யப்பெற்றது.]

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

(பதவுரை): உலகம் எல்லாம் - இம்மண்ணுலகம் முழுவதும்; வான்முகில் - வானத்திலுள்ள மேகம்; வழாது - தவறுமல்; பெய்க - மழை பொழிவதாக; மலிவளம் - அதனால் மிகுந்த செல்வம்; சுரக்க - மிகுவதாக; மன்னன் - அரசன்; கோன்முறை - செங்கோல் செலுத்

தும் நெறி முறைப்படி; அரசு - அரசாட்சி, செய்க செய்வாஞக; குறைவு இலாது - குறையற்று; உயிர்கள் - ஓரறிவுயிர்கள் முதல் எல்லா உயிர்களும்; வாழ்க - வாழ்ந்திருப்பதாக; நால் மறை - நான்கு வேதங்களி லும் வகுத்துச் சொல்லப்பட்ட வழியிலேயே; அறங் கள் - அறங்களானவை; ஓங்க - மிகுவதாக; நல் - நல்ல; தவம் - முனிவர்கள் ஆற்றும் தவங்களும்; வேள்வி-உல கப் பயன் கருதிச் செய்கின்ற உயிர்க் கொலையற்ற வேள்விகளும்; மல்க - பெருகுவதாகுக; மேன்மை கொள் - எல்லாச் சமயங்களிலும் மேலான நெறியைக் கொண்டிருக்கின்றதான; சைவநீதி - சைவ சமய நெறி முறைகள்; விளங்குக - நிலவுவதாக.

## பயிற்சியும் வினுக்களும்

1. சுருக்கமான விடை தருக:

   (அ) கந்தபுராண ஆசிரியர் பெயர் யாது?

   (ஆ) கந்தபுராணம் யாருடைய வரலாற்றைக் கூறும் நூல்?

   (இ) கச்சியப்பசிவாசாரியாரின் தந்தை பெயர் யாது?

   (ஈ) கச்சியப்பர் பிறந்த இடம் யாது?

   (உ) கச்சியப்பசிவாசாரியாரின் உபாசஞ மூர்த்தி யாவர்?

2. (i) "புன்னெறி அதனில்...." என்று தொடங்கும் புராணப்பாடலை வரி பிழையாது எழுதுக.

   (ii) இரு வினைகள் எவை?

   (iii) முருகப்பெருமானுக்கு எத்தனை புயங்கள் உண்டு?

(iv) பொருள் எழுதுக.

புன்னெறி — நன்னெறி — நவை —
வள்ளல் — பங்கயங்கள் —

3. இப்பாடலின் பொருளைச் சுருக்கி எழுதுக:

4. (அ) "வான்முகில் வழாது பெய்க...." என்ற தொடக்கப் பாடலை எழுதுக.

(ஆ) இப்பாடல் யாரால் பாடப்பட்டது?

(இ) இப்பாடலில் வாழ்த்தப்படும் பொருள்கள் எவை?

(ஈ) "மேன்மைகொள் சைவநீதி" இதன் பொருளை விளக்குக.

குறிப்பு: கந்தபுராணக் கதைச் சுருக்கத்தினை உமது ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

# 15. நம்பியாண்டார் நம்பி

சோழவளநாடு ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. இந்நாட்டிலே திருநாரையூர் என்னும் ஓர் ஊர் உண்டு. இவ்வூரிலே பொல்லாப் பிள்ளையார் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்தார். இங்கு ஆதிசைவர் ஒருவர் இருந்தார். ஆதிசைவர் அப்பிள்ளையாருக்கு நாள்தோறும் பூசனை செய்வது வழக்கம். இவர் புதல்வரே நம்பியாண்டார் நம்பி என்பவர்.

நம்பியாண்டார் நம்பி இளவயதுடையவராக இருந்தபோது, ஒருநாள் இவர் தந்தையார் வெளியூருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. ஆகவே, தம் மகனை அழைத்துப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசனை செய்யும்படி கூறிச் சென்றார். நம்பியும் தந்தையின் கட்டளைப்படி கோயிலுக்குச் சென்று பிள்ளையாருக்குத் திருமுழுக்காட்டினார்.

திருமுழுக்கு முடிந்ததும் பூசை செய்தார். பிறகு, பிள்ளையார் முன்பு உணவுத்தட்டை வைத்து உண்ணும்படி வேண்டினார். சிறிது நேரம் பொறுத்து உணவு அப்படியே இருக்கக் கண்டார். நம்பிக்கு வருத்தம் மிகுந்தது. பிள்ளையார் உணவை உண்டுவிடுவார் என்று சிறுவராகிய நம்பி எண்ணியிருந்தார். தன் பூசனை ஏற்கவில்லையோ என்று கண்ணீர்விட்டார். பிள்ளையாரைப் பார்த்து

"நீர் உண்ணுவிட்டால் நான் இங்கிருந்து போக மாட்டேன். கல்லில் தலையை இடித்து இறந்து விடுவேன்" என்று கூறினர்.

பொல்லாப் பிள்ளையார் சிறுவனுடைய மன நிலையை அறிந்தார். பின்னர், துதிக்கையை நீட்டி உணவு முழுவதையும் உண்டார். நம்பிக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. வெற்றுத்தட்டை வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய்த் தாயிடம் கொடுத்தார். தாய் நம்பியைப் பார்த்து, "உணவு எங்கே"? என்று கேட்டார். நம்பியடிகளோ, பொல்லாப் பிள்ளையார் உண்டுவிட்டதாகக் கூறினர். தாயார் இதனை நம்பவில்லை. நம்பி பொய் கூறுவதாக எண்ணி அவரை வீட்டைவிட்டு விரட்டி விட்டார். பள்ளிக்குப் போவதற்குக் கூடநம்பிக்கு உணவு கொடுக்கவில்லை.

நம்பியால் பசியோடு பள்ளிக்குப்போக முடியவில்லை; காலமும் கடந்துவிட்டது. நேரே பொல்லாப் பிள்ளையார் கோயிலுக்கே சென்றுர். அப்பிள்ளையாரையே தனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி வேண்டினர். பிள்ளையாரும் மனமுவந்து கற்பித்து அருள் புரிந்தார்.

ஊருக்குப் போயிருந்த தந்தையார் வீட்டிற்கு வந்ததும், நம்பியின் நிலையையும் பிள்ளையார் அருள் புரிந்ததையும் கேட்டு உணர்ந்தார். அளவிலா மகிழ்ச்சியடைந்தார். நம்பியடிகளும் அது

முதல் இறைவன் திருத்தொண்டுகளிலேயே ஈடு பட்டார். நாடெங்கும் நம்பியின் புகழ் பரவியது.

அக்காலத்தில் சோழ நாட்டை அபயகுலசேக ரன் என்னும் சோழ மன்னன் ஆட்சி செய்து வந் தான். அவன் சிவனடியாரிடம் மிகுந்த அன்பு கொண்டவன். ஒரு சமயம் நம்பியடிகளுடன் அபயகுலசேகரன் தில்லை நகருக்குச் சென்ருன். அங்கு திருக்கோயிலிலே புற்று மூடிக்கொண்டு இருந்த தேவாரத் திருமுறை ஏடுகளையெல்லாம் நம்பியின் உதவியால் எடுத்தான். நம்பியாண்டார் நம்பியே அவைகளை எல்லாம் பதினொரு திரு முறைகளாகப் பிரித்து ஒழுங்கு செய்தார். இது இவர் செய்த அரிய செயலாகும்.

இதனுல் நம்பியடிகளின் புகழ் தமிழ் நாடெங் கும் பரவத் தொடங்கியது. தில்லையிலிருந்து பல சிவத்தலங்களை வழிபட்டுக்கொண்டே நம்பி திரு நாரையூருக்கு வந்தார். பொல்லாப்பிள்ளையாரை வாழ்நாள் முழுவதும் வழிபட்டு, அவர் திருவடி களைச் சென்றடைந்தார்.

### பயிற்சியும் வினுக்களும்

1. சுருக்கமான விடை தருக:

(அ) திருநாரையூர் எங்கு இருக்கிறது?

(ஆ) இவ்வூரில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் இருக் கும் மூர்த்தியின் பெயர் யாது?

(இ) நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையா ருக்கு எவ்வாறு பூசை செய்தார்?

(ஈ) நம்பி பூசையின்போது ஏன் கண்ணீர் விட்டார்?

(உ) நம்பியைத் தாயார் கடிந்த காரணம் என்ன?

(ஊ) நம்பியின் குரு யாவர்?

(எ) நம்பிகாலத்தில் சோழநாட்டை ஆண்ட மன்னன் யார்?

(ஏ) நம்பியடிகள் சைவத்துக்குச் செய்த தொண்டு யாது?

2. நம்பியின் புகழ் நாடெங்கும்பரவக் காரணம் என்ன?

3. திருமுறைகள் தொகுக்கப்பட்டமை பற்றி 5 வரிக்குக் குறையாது எழுதுக.

4. நம்பியாண்டார் நம்பியைப் பற்றி பத்துவசனங்களுக்குக் குறையாது எழுதுக.

5. நம்பியாண்டார் நம்பியின் சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லுக அல்லது எழுதுக.

# 16. திருவிளக்கிடுதல்

சரியை வழிபாடு என்பதைப்பற்றி நீங்கள் படித்தீர்கள் அல்லவா? அவ்வழிபாடு மூன்று வகைப்படும் என்பதையும் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். அவற்றுள் உடம்பால் தொண்டு செய்வது ஒருவகையாகும். திருவிளக்கிடுதல் உடம்பால் செய்யும் சரியை வழிபாட்டில் ஒன்று. இதைப்பற்றி இந்தப் பாடத்தில் நீங்கள் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

கதிரவன் மறைந்தவுடன் மாலைப்பொழுது வருகிறது. மாலைப்பொழுது வந்ததும் இருள் சிறிது சிறிதாகப் பரவுகிறதல்லவா? பகலில் நாம் எல்லாப் பொருள்களையும் நன்கு பார்க்க முடியும். இதேபோல் இருளில் பார்க்க முடியாது. பகலில் கதிரவன் ஒளி வீசுகிறது. இரவில் இருளைச் சிறிது போக்க வீட்டில் விளக்கேற்றுகிறோம். விளக்கொளியால்தான் நாம் ஒருவரை ஒருவர் பார்க்க முடியும். கண்களிருந்தும் இரவில் விளக்கின் ஒளி தேவைப்படுகிறதல்லவா?

இரவில் இருளை நீக்க விளக்குத் துணை செய்வதைப் போல, நம் அறியாமை இருளைப் போக்க இறையொளி நமக்குத் துணைசெய்கிறது. அந்தப் பேரொளி எது தெரியுமா? அவர்தான் சிவபெருமான். நம் அறியாமை இருளைப் போக்குவதினால்தான் அவரை ஒளி வடிவினன் என்று போற்றுகிறோம்.

விளக்கும் விளக்கின் வழியாகக் கிடைக்கும் நெருப்பும் நமக்கு அன்றாட வாழ்க்கையில் மிகவும் தேவைப்படுகிறது. நம் வீட்டிலுள்ள இருளைப் போக்க விளக்கேற்றிவிட்டால்



போதுமா? அறியாமை இருளைப் போக்க நமக்குத் துணைசெய்யும் ஆண்டவன் கோயிலிலே விளக்கேற்ற வேண்டும். இவ்வாறு திருக்கோயிலிலே திருவிளக்கேற்றித் தொண்டு செய்வது நம் முதற் கடமையாகும்.

இக்காலத்தில் மின் விளக்குகள் எங்கும் எரிகின்றன. எனினும், வித்து வகையில் உண்டாகிய எண்ணெயை ஊற்றித் திரியிட்டு ஏற்றும் விளக்குகளே இறைவனுக்கு ஏற்றவை. எண்

ணெய் விளக்கில் ஒளியின் முழுவடிவத்தைக் காண்பது போல மின்விளக்குகளில் நாம் காண முடியாது. ஆகவே, எண்ணெய் விளக்குகளே நாம் வழிபடுவதற்குத் தக்கவையாகும்.

எள், கடலை, ஆமணக்கு, இருப்பை முதலிய வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். இவற்றிலிருந்து கிடைக்கும் எண்ணெய்களே விளக்கிடுவதற்குச் சிறந்ததாகும். பசுவின் நெய் ஊற்றி எரிக்கப்படுகின்ற விளக்குகளே திரு விளக்கு என்னும் சிறப்புப்பெயரால் அழைக்கப் பெறுவனவாகும்.

அகல்களில் எண்ணெய் ஊற்றித் திரியிட்டு விளக்கேற்றுகிறோம். இந்த அகல்கள் மண்ணு லாவது வெண்கலம் முதலிய உலோகங்களாலா வது செய்யப்பட்டிருக்கும். இவற்றைச் சாம்பல் கொண்டு விளக்கித் தூய துணியால் துடைத் தல் வேண்டும். பின்னர் திருநீறணிந்து, சந்த னப் பொட்டும், அவற்றின்மீது குங்குமப்பொட் டும் இடுதல் வேண்டும். அந்த அகல்களில் நெய் ஊற்றி—தாமரைநூல், வெள்ளெருக்குநூல், பருத்தி நூல் இவைகளில் ஏதேனும் ஒன்றால் திரியமைத்து இடவேண்டும். அதன் பின்னர்,

"இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

என்பது போன்ற திருப்பாடல்களை ஓதிக் கொண்டே திருவிளக்கேற்றுதல் வேண்டும். அப்பால், அத்திருவிளக்கை நோக்கி வழிபட வேண்டும்.

நமக்குப் பலவகையிலும் நன்மை தரும் விளக்கை நாம் நாள்தோறும் திருக்கோயில்களில் ஏற்றி வணங்குவது நல்லது. இறைவரும் நம் தொண்டை அன்புடன் ஏற்றுக் கொள்வார். அன்றியும், வீடுகளிலும் திருவிளக்கேற்றி வழிபாடு செய்தல் வேண்டும். இவ்வாறு வழிபாடாற்றுபவருக்கு நோய், நொடிகள் அணுகா; துன்பங்கள் வாரா; மனம் மாசின்றிப் பளிங்கு போல் தோன்றும்; எண்ணிய செயல்கள் ஈடேறும்; கல்வியும் செல்வமும் பெருகும். நமிநந்தி அடிகள் திருவிளக்கேற்றும் பணியை மேற்கொண்டு முத்தியடைந்தார்.

மாணவர்களாகிய நீங்களும் தூய உள்ளத்துடன் திருவிளக்கேற்றிப் பொன்னும் பொருளும், புகழும் அடைந்து இறைவன் அன்பைப் பெறுவீர்களாக.

### பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக:

(அ) திருவிளக்கிடுதல் எந்த வழிபாட்டில் அடங்கும்?

(ஆ) நம் அறியாமை இருளைப் போக்க உதவும் ஒளி யாது?

(இ) விளக்கேற்றிப் போற்ற வேண்டிய இரு இடங்கள் எவை?

(ஈ) திருவிளக்கென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எதனை?

(உ) விளக்கிடுவதற்கு ஏற்ற எண்ணெய் எவை?

2. திருவிளக்கு எவ்வாறு ஏற்றுதல் வேண்டும்?

3. திருவிளக்கிடுதலால் உண்டாகும் நன்மைகள் எவை?

4. திருவிளக்கிடும்போது ஓதக்கூடிய இருதேவாரங்கள் சொல்லுக அல்லது எழுதுக.

5. திருவிளக்கிடுதல் பற்றி பத்து வரிக்குக் குறையாது எழுதுக.

குறிப்பு: நமிநந்தி அடிகளைப்பற்றி உமது ஆசிரியரிடம் விளக்கமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

# 17. விருத்தாசல புராணம்

கீழ்வரும் பாடல் விருத்தாசல புராணத்தில் வரும் பிள்ளையார் வணக்கம் ஆகும். இதன் ஆசிரியர் பெயர் ஞானக்கூத்தர். இவர் சிவன் பாக்கத்துச் சைவத்துறவி யார் ஆவர்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

(பதவுரை): திருவும் - செல்வமும்; கல்வியும் - கல்வி கேள்விகளும், சீரும் - அவைகளால் வரும் புகழ், அறிவு களினால் ஆகும் சிறப்புக்களும்; தழைக்கவும் - உண் டாகவும்; கருணை - அருளானது; பூக்கவும் - மலரவும்- தீமையை - தீவினைகளை; காய்க்கவும் - அழிக்கவும்; பரு வம் ஆய் - பக்குவமாக; நமது - நம்முடைய; உள்ளம் - மனமானது; பழுக்கவும் - கனிவு கொள்ளவும்; பெரு கும்-வளர்கின்ற; ஆழத்து - நம் உள்ளத்தினுள் விளங் குகின்ற; பிள்ளையை-விநாயகப் பெருமானை; பேணு வாம் - போற்றி வழிபடுவாம்.

### பயிற்சியும் வினாக்களும்

1. (அ) "திருவும் கல்வியும்..." என்ற தொடக்கத்தை யுடைய பாடலை எழுதுக.
   (ஆ) இப்பாடல் எந்நூலில் உள்ளது?
   (இ) இதன் ஆசிரியர் பெயர் யாது?
2. நாம் ஏன் பிள்ளையாரை வணங்குதல் வேண்டும்?
3. பொருள் எழுதுக:
   திரு —, சீர் —, காய்க்கவும்—, பிள்ளை —
4. பாடலின் பொருளை உமது வசன நடையில் எழு துக.

# 18. திருப்புகழ்

இந்நூல் அருணகிரி நாதரால் அருளிச் செய்யப் பெற்றது. இவர் தமிழகத்தில் உள்ள திருவண்ணுமலை என்னும் சிவப்பதியில் பிறந்தவர். இளமையில் அறியாமையால் குற்றங்கள் பல செய்தனரெனினும், இறுதியில் முருகப்பெருமான் அருள் பெற்றவர். முருகப் பெருமான்மீது இவர் பாடிய பாடற்றெருகுதியே திருப்புகழ் எனப்படும். கீழ்வரும் பாடல் ஈழநாட்டிலுள்ள கதிர்காமம் என்னும் பதியின்கண் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுகிய கதிரேசக் கடவுள்மீது பாடியதாகும்.

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான

திருமகளுலாவும் இருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்வினை யாடும்
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரிவுசடைவேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்

இருவினையி லாத திருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே!

(பதவுரை) திருமகள் - இலக்குமிதேவி; உலாவும் - தழுவுகின்ற; இருபுயமும்-இரண்டு தோள்களையுடைய; முராரி-திருமாலுக்கு; திரு-சிறந்த; மருகநாம-மருகனென்னும் முறைப் பெயரையுடைய; பெருமாள் காண் - பெருமையையுடையவனுவான், காண்பாயாக; செகதலமும் - இம்மண்ணுலகத் தரசர்களும்; வானும்- மேலுலகத்தவர்களும்; மிகுதிபெறுபாடல் - மிகுதியாகப் பாடிய சிறந்த பாட்டுக்களை; தெரிதரு - அறிகின்ற; குமர-இளமையுடையவனை; பெருமாள்காண் - பெருமையையுடையவனுவான்; அறிவாயாக.

மருவும் - அன்பு பொருந்திய; அடியார்கள்-தொண்டர்கள்; மனத்தில் - நெஞ்சத்தில்; விளையாடும் - குடிகொண்டு இன்பத்துடன் இருக்கின்ற; மரகதம் - மரகதம் போன்ற பச்சைநிறம் பொருந்திய; மயூரம்-மயிலூர்தியையுடைய; பெருமாள்காண் - பெருமையையுடையவனுவான், அறிவாயாக; மணிதரளம் - அழகிய முத்துக்களை; வீசி - ஏற்றிக்கொண்டு; அணி - நெருங்கிய; அருவி - மலையருவி நீரானது, சூழ-சூழ்ந்துவர; மருவு - பொருந்தியிருக்கின்ற; கதிர்காமம் - கதிர்காமம் என்னும் திருநகரிலே எழுந்தருளியிருக்கின்ற; பெருமாள்காண் - பெருமையையுடையவனுவான்; அறிவாயாக.

அருவரைகள்-நெருங்குவதற்கு அரியதான கிரௌஞ்சம் முதலிய மலைகள்; நீறுபட-தூள்தூளாக நொருங்க; அசுரர் மாள - அரக்கர் மாண்டொழிய; அமர் பொருத -

போர் செய்த; வீரப் பெருமாள் காண்-வீரமுள்ள பெருமையையுடையவனுவான். அறிவாயாக; அரவு-நாக பாம்பையும்; பிறை - மூன்றும் பிறைச் சந்திரனையும்; வாரி-கங்கையையும்; விரிவு - ஒன்ருகச் சூடிய; சடைவேணி - சடையையுடைய, அமலர் - மலமற்றவராகிய சிவபெருமானுக்கு; குருநாத - ஓமென்னும் மந்திர மொழிப் பொருளை ஓதிய ஞானகுரு முதல்வனுன; பெருமாள்காண் - பெருமையையுடையவனுவான்; அறிவாயாக.

இருவினை - நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும்; இல்லாத - அற்ற; தருவினை-(அரிச்சந்தானம், மந்தாரம், சந்தானம், பாரிசாதம் கற்பகம் என்னும் ஐவகை) மரங்களையும்; விடாத-உடைய; இமையவர் - வானுலகத் தேவர்களின்; குல ஈச பெருமாள் காண் - கூட்டத்துக்குத் தலைவனுன பெருமையையுடையவனுவான் அறிவாயாக; இலகு-விளங்குகின்ற; சிலை; வில்லையுடைய; வேடர் - குறவர் குலத்தில் வளர்ந்த; கொடியின்-கொடிபோன்றவரான வள்ளி நாயகியாரின்; அதிபார-மிகப்பெருத்த; இருதன - இரண்டு கொங்கையின்; விநோதப் பெருமாள் - இன்பந் தினைக்கும் பெருமாளவன். (இவனை வழிபட்டால் ஞானம் பெறலாம்; நலம்பெறலாம். இவனைப் போற்று என் நெஞ்சே!)

## பயிற்சியும் விஞக்களும்

1. சுருக்கமான விடைதருக:

(அ) திருப்புகழ் ஆசிரியர் யார்?

(ஆ) அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள் எவை?

(இ) ஈழநாட்டில் பாடல் பெற்ற முருக ஆலயம் எது?

(ஈ) முருகன் யாரிடத்து விளையாடுவான்?

(உ) கதிர்காமச் சிறப்பு யாது?

(ஊ) சிவபிரான் தலையில் இருக்கும் பொருள்கள் எவை?

(எ) "இலகுசிலை வேடர் கொடி." என்றது யாரை?

(ஏ) அமலர் குருநாதன் யார்?

2. "அருவரைகள் நீறு பட அசுரர்மாழ" இதில் கூறப்பட்ட விடயங்கள் எவை?

3. பொருள் எழுதுக:

முராரி — மருகன் — செகதலம் — மயூரம் — வாரி— வேணி —, அமலர் — இமையவர் — குலேசர் —

## 19. அப்பூதியடிகள்

சோழநாட்டிலே திங்களூர் என்று ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் அந்தணர் அதிகமாக இருந்தனர். அவர்களில் அப்பூதி அடிகளும் ஒருவர். இவர் சிவபெருமானிடம் அன்புடையவர். சிவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே தம் கடமையாகக் கொண்டவர். இவர் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு நல்ல திருப்பணிகள் செய்து வந்தார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் இவர் காலத்தில் பேரும் புகழும் பெற்றுத் தலைசிறந்த சிவனடியாராக மக்களால் போற்றப்பட்டு வந்தார். அவர் பெருமையை அறிந்த அப்பூதி அடிகள் அவரைப் பார்க்காமலே அவர்பால் அன்பு கொண்டார். தான் அமைத்த தண்ணீர்ப் பந்தல்கள், அறச்சாலைகள் முதலியவற்றிற்குத் திருநாவுக்கரசரின் பெயரையே சூட்டினார். தன் இரு பிள்ளைகளுக்கும் மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

திருநாவுக்கரசர் பல சிவத்தலங்களை வழிபட்டுக் கொண்டே ஒருநாள் திங்களூருக்கு வந்து சேர்ந்தார். வழியிலிருந்த தண்ணீர்ப் பந்தல் ஒன்றிலே தங்கினார். அப்பந்தலின் முன்னர் தன் பெயர் எழுதியிருப்பதையறிந்து இத்தண்ணீர்ப்பந்தல் யாருடையது என வின

வினர். அப்பூதியடிகளுடையது என்று பலரும் சொல்லக்கேட்டு அவரைக் காணச் சென்றார்.


திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் வீட்டை அடைந்தார். சிவனடியார் ஒருவர் வந்திருப்ப தறிந்து அவரை அப்பூதியடிகள் வணங்கி வர வேற்றார். 'தாங்கள் யார்?'' என்று கேட்டார். தான் இதுவரையிலுங் காணாத திருநாவுக்கரசரே என்ப தறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாவுக்கரச ரின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர். அவரை நல்ல ஆசனத்தில் அமரச் செய்தார். அவ ருக்குத் திருவமுது செய்விக்க வேண்டுமென்று மனைவியாரிடங் கூறினர்.

அம்மையாரும் மகிழ்ச்சியடைந்து அறு சுவை யுடன் உணவு சமைத்தார். நாவுக்கரசரை அமுது செய்விக்க எழுந்தருளும்படி நம் அடிகள் வேண் டிக்கொண்டார். தன் மூத்த மகன் திருநாவுக் கரசை அழைத்து அடியார் அமுது செய்ய வாழை இலை அறுத்து வரும்படி பணித்தார்.

மூத்த திருநாவுக்கரசு உடனே விரைந்து தோட்டத்திற்குச் சென்றான். வாழை இலையை அறுத்தான். அறுக்கும்போது அங்கிருந்த பாம்பு ஒன்று அவனைத் தீண்டிவிட்டது. நஞ்சு தலைக் கேறியது. நடை தளர்ந்தது. இருப்பினும் அடிய வர் அமுது செய்யக் காத்துக்கொண்டிருப்பாரே என்று எண்ணி வீட்டிற்கு ஓடிவந்தான். தன் அன்னையிடத்தில் வாழை இலையைக் கொடுத்து,

சோர்ந்து விழுந்துவிட்டான். நஞ்சின் வேகம் அதிகமாயிற்று. மூத்த திருநாவுக்கரசு மடிந்தான்.

அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் மகனின் நிலைமையைக் கண்டனர். இறந்துவிட்டான் என்பதை உணர்ந்தனர். அரவின் வேலையே என்று தெரிந்தனர். உண்மை வெளிப்பட்டால் நாவுக்கரசர் அமுது செய்யமாட்டார் என்று கருதித் தம் மகனின் பிணத்தை ஒரு துணியால் மூடி ஒருபுறம் மறைத்துவிட்டனர். மனத்தைத் திடப்



படுத்திக்கொண்டு, சிறிதும் கலங்காமல் அடியாரை அமுது செய்விக்க எழுந்தருளும்படி வேண்டினர்.

நாவுக்கரசர் உணவுண்ண இருக்கையொன்றிலே அமர்ந்தார். திருநீற்றை எடுத்து எல்லோ

ருக்கும் கொடுத்துக்கொண்டு வந்தார். மூத்த திருநாவுக்கரசு அங்கு இல்லாததால், "மூத்த திரு நாவுக்கரசு எங்கே? அவனை அழையுங்கள்," என்ருர். அப்பூதி அடிகளும் அம்மையாரும் மனம் வருந்தினர். "என்ன செய்வது? எப்படிச் சொல் வது?" என்று அறியாமல் திகைத்தனர். எனினும், மனந்தேறி "இங்கு அவன் இப்போது உதவ மாட்டான்", என்ருர் அப்பூதியடிகள்.

நாவுக்கரசர் மனம் ஒப்பவில்லை. "வரவிடுங் கள் அவனை" என்று வற்புறுத்திஞர். உண்மையை அப்பூதியடிகள் உரைத்ததும் நாவுக்கரசர் மனம் நடுக்கமுற்றது. "என்ன துணிவு உங்க ளுக்கு? இப்படிப்பட்ட செயல் எவரேனும் செய் வார்களா?" என்று கடிந்துகொண்டார். மூத்த திருநாவுக்கரசரின் பிணத்தை - திருக்கோயிலுக் குக் கொண்டுவரச் செய்து, கோயிலின் முன் கிடத் திஞர். 'ஒன்று கொலாம்' என்று தொடங்கி ஒரு பதிகம் பாடி எல்லாம் வல்ல இறைவனை வழி பட்டார்.

இறைவனருளால் மூத்த திருநாவுக்கரசு உறக் கத்திலிருந்து விழித்து எழுவதைப்போல் எழுந் தான். யாவரும் வியந்து நாவுக்கரசரையும் இறை வரையும் வாழ்த்தினர். அப்பர் சில நாள் அப்பூதி யடிகளின் விருப்பத்திற்கேற்ப அங்கேயே தங்கி யிருந்து புறப்படலாஞர். அப்பூதியடிகளின்

கலங்கா நிலையையும், அவர் தொண்டையும் யாவரும் பாராட்டினர்.

## பயிற்சியும் வினாக்களும்

1 சுருக்கமான விடை தருக:

(அ) அப்பூதியடிகளின் இடம் யாது?

(ஆ) இவர் காலத்தில் மக்களால் போற்றப்பட்டு வாழ்ந்த நாயனார் யார்?

(இ) அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கொண்ட அன்பு எவ்வகைப் பக்தியில் அடங்கும்?

(ஈ) மூத்த திருநாவுக்கரசின் உயிர் வேண்டி அப்பர் பாடிய தேவாரப்பதிகத்தின் முதல் யாது?

(உ) அப்பூதி அடிகளை மக்கள் பாராட்ட ஏதுவாய் இருந்தன யாவை?

2. அப்பூதி அடிகளிடத்துக் காணப்பட்ட சிறந்த குணங்கள் எவை?

3. திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் வரவேற்ற முறை பற்றி எழுதுக.

4. மூத்ததிருநாவுக்கரசின் உயிர் நீக்கம் பற்றி ஐந்து வரிக்குக் குறையாது எழுதுக.


5. நாவுக்கரசர் விடம் தீர்த்தமை பற்றி பத்து வாக்கியங்கட்குக் குறையாது எழுதுக.

# 20. கதிர்காமம் - I

ஈழ நாட்டின் தென் பகுதியில் கதிர்காமம் என்னும் திருப்பதி ஒன்று உண்டு. இது "திசம காருமா" என்னுமிடத்தில் இருந்து பன்னிரண்டு கல் தொலைவில் இருக்கின்றது. சிங்களத்தில் "கதறகம" என்று அழைப்பர். இங்கே பழம் பெருமை வாய்ந்த முருகன் கோவில் ஒன்று இருக்கிறது. 'குன்றுதோறும் ஆடல்செய்யும்' முருகவேள் கதிர்காமத்திலும், அதற்கு அண்மையிலுள்ள கதிரமலையிலும், எழுந்தருளியிருப்பது வியப்பல்லவா?

வரையாது கொடுத்த குமண வள்ளல்போன்று வளங்கெடாது பெருக்கெடுத்துப் பாயும் ஆறு மாணிக்ககங்கை. இதன் மேல் ஓர் அழகிய ஆடு பாலம் உண்டு. ஆடுபாலத்தின் மீதுஏறி அக்கரைக்குச்சென்றால், தென்படுவது முருகன் கோவில் இது மூலத்தானத்தையும் கர்ப்பக்கிருகத்தையும் சிறு மண்டபத்தையும் கொண்ட சாதாரண ஒரு கட்டிடத்தை உடையது.

கோயில் மூலத்தானமானது சின்னஞ் சிறு பல் பிணிச் சிற்றறிவினோராகிய எமக்குப் புலனாகாத யந்திரப்பெட்டி ஒன்றை உடையதாக இருக்கிறது. இது முத்துலிங்க சுவாமிகளால் அமைக்கப்பட்டதெனக் கூறப்பட்டு வருகிறது. பக்கத்திலே வள்ளியம்மை, தெய்வானையம்மன் கோயில்கள் உண்டு.



கதிர்காமம்

முருகப்பெருமான் வலம்வரும் வீதி முருகனது வேல் போன்ற முக்கோண அமைப்பை உடையதாய் சிவலிங்கத்தை நினைவு படுத்துகின்றது.

இங்கே நடைபெறும் பூசை முறை மற்றச் சைவக் கோயில்களுக்கு முரண்பட்டது. 'கப்புருளை' எனப்படும் சிங்களப் பூசகர்களே வேண்டிய பணிகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் ஈரப் புடவையினால் வாயைக் கட்டிக்கொண்டு முருகனுக்கு வேண்டிய நைவேத்தியம், அர்ச்சனைத் திரவியங்கள் முதலியவற்றை உட்பிரகாரத்திற்குக் கொண்டுசெல்வர். பின்னர், வெளியே பிரதிமை தீட்டப்பட்ட திரைமறைப்பின் முன்னர் நின்று ஓங்கார வடிவாகக் கைகளை உயர்த்திக் கூப்பி வணங்குவர்.

கதிர்காமத்தில் புது வருடப் பிறப்பன்றும் ஆடி மாதத்திலும் திருக்கார்த்திகைத் தினத்தன்றும் திருவிழா நடைபெறும். ஆடிமாதத்தில் நடைபெறுவது கொடியேற்றத் திருவிழா என்று அழைக்கப்படும். திருவிழாக் காலங்களில் அலங்கரிக்கப்பட்ட யானைகள் மீது இந்த இயந்திரப் பெட்டி, இரகசியமாக வைக்கப்பட்டு முக்கோண வடிவான வீதி வழியே வலமாகக் கொண்டுவரப் படும்.

அந்த நேரத்தில் பக்தர்கள் ஒருங்கு சேர்ந்து செய்யும் ஆரவாரம் வானைப் பிளக்கும். 'அரோகரா, அரோகரா'' என்றும், "வேல் வேல், சக்தி

வேல்'' என்றும், "ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி வேல்'' என்றும் பாடிக் கூத்தாடிச் செல்வர்.

அடியார் குழாம் முன் செல்ல, சல்லரியும் மத்தளமும் பின் ஒலிக்க, பாத கிண்கிணிகள் இடையே ஒலி செய்ய, கோயில் நிலைமைமார் தொடர, வேட்டுவக் கன்னியர் ஆராத்தி எடுக்க, கற்பூரதீபம் கோடி சூரியர் போன்று பிரகாசிக்க, நடுவே திருமுருகனது யந்திரம் வைத்த யானை அசைந்து அசைந்து செல்ல, பின்னே பசனைக் கோஷ்டியின் முருக பசனை உள்ளத்தை உருக்க வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். என்னே! கலியுக வரதனின் திருவிளையாடல்!!

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றுள் தீர்த்த விசேடத்தால் சிறந்தது மாணிக்க கங்கைத் தீர்த்தமாகும். தெள்ளத் தெளிந்த நீரானது மலத் தொடக்கமற்ற பரிசுத்த ஆன்மாவைப் போன்று காட்சியளிக்கிறது. கதிர்காமத்திற்கு வரும் யாத்திரிகர்கள் மாணிக்க கங்கையில் நீராடித் தமது களைப்பையும், இளைப்பையும் ஒருங்கே நீக்கிப் புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டையும் அடைந்து முருகனை வணங்கி வேண்டிய பயனைப் பெறுகின்றனர்.

கதிர்காமக் கோயிலின் அண்மையிலே முத்துலிங்க சுவாமி கோயில், மாணிக்கப் பிள்ளையார் கோயில் என்பனவும், முஸ்லிம்களின் தொழுகைக்குரிய 'பள்ளிவாசலும்', பௌத்த சமயத்தவர்

வணங்கும் புத்த விகாரையும் உள. சிறிது தூரத்தில் விபூதி மலையும் உண்டு.

பிள்ளைகளே! இவற்றை நீங்கள் நேரே சென்று பார்ப்பதோடு அந்த முருகப்பெருமானைக் கண் குளிரக் கண்டு வழிபட்டு அவன் அருள் பெற்று உய்வீர்களாக.

## பயிற்சியும் வினாக்களும்

1. இடைவெளி நிரப்புக:

   (அ) ஈழநாட்டின் — பகுதியில் கதிர்காமம் என்னும் — இருக்கின்றது.

   (ஆ) ஆலயத்தின் பாங்கர் — பாய்கின்றது.

   (இ) கோயிலின் மூலஸ்தானத்திலிருக்கும் — பெட்டி — சுவாமிகளால் — என்பர்.

   (ஈ) பெருமான் வலம் வரும் — முருகனது — போன்று — வடிவாய் அமைந்துள்ளது.

2. கதிர்காமத்தில் நடைபெறும் பூசை முறையை விளக்குக.

3. கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாக்கள் குறித்து விளக்கிக் கூறுக.

4. கதிர்காம ஆலயத்தைச் சுற்றியுள்ள ஆலயங்கள் பற்றிக் கூறுக.

5. பின்வருவன பற்றி ஒவ்வோர் வசனம் எழுதுக.

   கப்பறுளை, முத்துலிங்கசுவாமி, அரோகரா, யந்திரப் பெட்டி, திலைமைமார்.

# 21. கதிர்காமம்—II

பிள்ளைகளே! முந்திய பாடத்தில் கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பற்றிப் படித்தீர்கள். இந்தப் பாடத்தில் கதிரை மலையைப் பற்றியும் செல்லக் கதிர்காமத்தைப் பற்றியும் படிப்போம்.

## கதிரைமலை

கதிர்காமக் கந்தனை வணங்கிய அன்பர்கள் முருகப் பெருமானின் அருளைப் பெறுவதற்காகக் கதிரைமலைக்குச் செல்வார்கள். கதிரைமலை கோயிலிலிருந்து சுமார் அரைக்கல் தொலைவில் உண்டு. ஆனால், மலை உச்சியை அடைய ஏறக் குறைய இரண்டு கல் தொலைவரையில் ஏறவேண்டும். அடர்ந்த காட்டினூடே ஒரு காலடிப்பாதை செல்கின்றது. அதன் வழியாகவே ஏறிச் செல்லுதல் வேண்டும். இடையிடையே படிகளும் வெட்டப்பட்டுள்ளன.

யானைகளும் மான்களும் நிறைந்த காட்டில் மரங்களின் மீது தாவிப் பாயும் குரங்குகள் ஒரு புறம். அவற்றின் ஓசையைக் கேட்டுக் 'கீச்' சிடும் குருவிகள் மறுபுறம். இவற்றை அடியார்கள் பார்த்து மகிழ்ந்துகொண்டு 'அரோகரா' என்று கோசமிட்டுக்கொண்டு இயற்கை அன்னையின் இன்பப் பந்தலாகிய மரநிழலில் மெய்மறந்து உச்சியை நோக்கிச் செல்வர். திருவிழாக் காலங்களில் இடையிடையே அமைக்கப்பட்ட தண்

ணீர்ப் பந்தல்களில் அடியார்கள் வரவேற்கப்பட்டுத் தாக சாந்தி நீக்கப்பெறுவர். இவ்வாறே பக்தர்கள் உச்சியை அடைவர்.

உச்சிமலையில் ஒரு வேல் மாத்திரம் காட்சி யளிக்கிறது. பக்தர்கள் வேலாயுதத்தை வலம் வந்து தேங்காய் உடைத்துக் கற்பூர ஆராதனை செய்து வணங்கி, வேண்டிய அருளைப் பெற்று மலை அடிவாரத்தை அடைவர்.

## செல்லக்கதிர்காமம்

இஃது கதிர்காமத்திலிருந்து சுமார் நான்கு கல் தொலைவில் இருக்கிறது. கதிர்காமம் செல்லும் பக்தர்கள் செல்லக்கதிர்காமம் செல்லத் தவறமாட்டார்கள். இருள் சூழ்ந்த காட்டின் இடையே ஓர் அகன்ற பாதை செல்கின்றது. திருவிழாக் காலங்களில் அன்பர்கள் மனவிருப்போடு கொடுக்கும் பொருள்களை ஏற்பதற்காக ஆங்காங்கே இரு மருங்கும் இருக்கும் ஐயமேற்பார் பலர். அவர்களைக் கடந்து இனிய காட்சிகளைக் கண்டு களித்துச் செல்வோமாயின் செல்லக் கதிர்காமத்தை நாங்கள் காணலாம்.

மெல்லெனப் பாயும் ஆறு, மருங்கில் ஓங்கி வளர்ந்த மருதமரங்கள், அவற்றின்மேல் அடியவர்கள் உடைக்குந் தேங்காயை எடுத்துக் கொண்டு செல்வதற்காகக் காத்துக்கொண்டு இருக்கும் சிறு குரங்குகள், மறுபக்கம் ஓங்கி வளர்ந்த காடு, இவற்றின் மத்தியில் வெண் மணல் பரப்பிய ஒரு பகுதி, அதில் ஒரு சிறு

கட்டிடம், அதுவே செல்லக்கதிர்காமத்தான் எழுந்தருளியிருக்கும் தலம்.

பக்தர்கள் மாணிக்க கங்கையில் நீராடல் செய்து பக்தி சிரத்தையோடு பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் முதலியவற்றைக் கையிலேந்தி அர்ச்சனை செய்வித்து வலம் வந்து வணங்குவர். சிலர், அன்று அங்கேயே பகலுணவை ஆக்கி அடியவர்களுக்கும் கொடுத்துத்தாங்களும் உண்டு ஆறியிருந்து மாலை நேரமாகக் கதிர்காமத்துக்குத் திரும்புவர்.

சைவசமயிகளாகிய நீங்கள் ஒருநாளாகுதல் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்க வேண்டும். அவனை வணங்கி அவன் அருள்பெற்று உய்வீர்களாக.

### பயிற்சியும் வினாக்களும்

1. சுருக்கமான விடை தருக :
   (அ) கதிரைமலை எங்கு இருக்கிறது?
   (ஆ) கதிரைமலை உச்சியை அடைய எவ்வளவு தூரம் மலையில் ஏறுதல் வேண்டும்?
   (இ) மலை ஏறுவோர் கேட்கும் ஓசைகள் யாவை?
   (ஈ) மலை உச்சியில் வணக்கத்துக்குரியதாகக் காணப்படும் உருவம் யாது?
   (உ) கதிர்காமத்திலிருந்து செல்லக்கதிர்காமம் எவ்வளவு தொலைவில் இருக்கின்றது?
2. செல்லக்கதிர்காமம் செல்லும் மார்க்கம் பற்றி எழுதுக.
3. செல்லக்கதிர்காமத்தில் பக்தர்கள் தங்கள் வந்தனை வழிபாடுகளை எவ்வாறு ஆற்றுவர்?
4. கதிர்காமத்தைப் பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

# 22. சிவாலயத் தொண்டு இயல்

**1. ஆலயத்தில் செய்யப்படும் தொண்டுகளில் சிறந்தன யாவை?**

திருவலகிடுதல் - திருமெழுக்கு-திருநந்தவனம் வைத்தல் - பத்திரபுஸ்பம் எடுத்துக்கொடுத்தல் - மாலைகட்டுதல் - தூபம் இடுதல் - தீபம் ஏற்றுதல் - திருமுறைகளைப் பண்ணுடன் ஓதுதல் - ஆனந்தக் கூத்தாடல் - பூசைத் திரவியங்கள் அளித்தல் என்பன.

**2. திருவலகு எப்படி இடுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்குமுன் ஸ்நானம் செய்து விபூதி தரித்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று மெல்லிய புல்லினல் கட்டப்பட்ட துடைப்பத்தால் அலகிடல் வேண்டும். குப்பையை வாரி வெகுதூரத்தே குழியில் போடுதல் வேண்டும்.

**3. திருமெழுக்கு எப்படிச் செய்தல் வேண்டும்?**

தூய பசுவின் சாணத்தை நீரில் கரைத்தெடுத்து செங்கல், மண், சுண்ணும்பு படுத்த நிலங்களை மெழுகல் வேண்டும். கருங்கல், சீமெந்து இடப்பட்ட நிலத்தை நீர்கொண்டு கழுவுதல் வேண்டும்.

**4. திருநந்தவனம் எப்படி அமைத்தல் வேண்டும்?**

மயானத்துக்கும் சண்டாளர் பூமிக்கும் தூரமான இடத்தில் நான்கு புறமும் வேலியமைத்து நிலத்தை ஆழமாகப் பரிசோதித்துப் பண்படுத்தல் வேண்டும். பின் பசு மந்தைகளைக் கட்டிச் சுத்தப்படுத்தி - பூஞ்செடிகளைப் பயிரிடுதல் வேண்டும்.

5. நந்தவனத்தில் நாட்டக்கூடிய செடிகள் சில கூறுக.

வில்வம் - பாதிரி, பன்னீர் - கொன்றை - பொன்னு விரை - மந்தாரை - சண்பகம் - புன்னை - கடம்பு - அலரி- நந்தியாவத்தை - செம்பரத்தை - செவ்வந்தி - துளசி என்பன.

6. நந்தவனத்தில் நாட்டக் கூடிய கொடிகள் சில கூறுக.

மல்லிகை, முல்லை, இருவாட்சி, தாமரை, செங்கழு நீர், ஆம்பல்.

7. பூ-எடுப்பவர் எப்படி இருத்தல் வேண்டும்?

சூரியன் உதிக்கு முன் நித்திரை விட்டெழுந்து காலைக்கடன் முடித்து ஸ்நானம் செய்து சுத்தமான ஆடை உடுத்து வண்டுகள் மலரை நாடு முன்னர் நந்த வனம் செல்ல வேண்டும்.

8. எத்தகைய பூக்களை எடுத்தல் கூடாது?

உலர்ந்தவை - நிலத்தில் விழுந்து கிடந்தவை - புழு அரித்தவை - அரும்பு முதலியன.

9. பூ-எடுத்து எதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்?

பூக்கூடை; பூக்கூடைபோல் அமைந்த பாத்திரங் கள்: வாழையிலை; தாமரையிலை என்பனவற்றில் ஆகும்.

10. தூபம் எப்படி இடுதல் வேண்டும்?

வாசனைப் பொருள்களைக் கலந்து இடித்து வைக்கப் பட்ட சாப்பிராணி கொண்டு இடல் வேண்டும்.

**11. திருவிளக்கிடுதற்கு என்ன நெய் சிறந்தது?**

பசுநெய் சிறந்தது. கிடையாவிடத்து ஒன்றுக்கு மேற்பட்ட தீபங்களுக்கு எண்ணெய், இருப்பைநெய், தேங்காய்நெய் உபயோகிக்கலாம்.

**12. திரிக்கு என்ன நூல் உபயோகித்தல் வேண்டும்?**

தாமரை நூல் - வெள்ளெருக்குநூல் - பருத்தி நூல்.

**13. தோத்திரம் செய்வதெப்படி?**

பன்னிரு திருமுறைகளில் பொறுக்கி எடுத்து காலம், இடம், சமயத்துக் கேற்ப மனம் உருக - கண்ணீர்வார - உரோமம் சிலிர்ப்ப - பண்ணோடு பாடல் வேண்டும்.

**14. ஆனந்தக் கூத்தாடுவது எவ்வாறு?**

உலகத்தார் நகைக்கினும் அதனைப் பாராது நெஞ்சு நெக்குருக, கண்ணீர்பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, கை களைக்கொட்டிப், பாடல்களைப்பாடி, கால்களைச் சதிபெறவைத்து - ஆனந்தக்கூத்தாடல் வேண்டும்.

**15. பூசைத் திரவியங்களாக எவற்றைக் கொடுத்தல் வேண்டும்?**

பூவகைகள் - வாசனைப் பொருள்கள், முழுக்குப் பொருள்கள், ஆனைந்து, பஞ்சாமிர்தப்பொருள்கள், நிவேதனப் பொருள்கள் என்பன.

**16. ஆனைந்து என்பது எவை?**

பால் - தயிர் - நெய் - வெண்ணெய் - மோர்

17. சிவாலயத்தில் மேலும் செய்யக் கூடிய தொண்டுகள் எவை?

திருவீதியிலுள்ள புற்களைச் செதுக்குதல் - திருக்கோபுரத்திலும் தூபியிலும் மதிலிலும் முளைக்கும் புல், பூண்டு, செடி, கொடி இவற்றினை வேரோடு களைதல்- கோவில், குளம், வீதி இவைகளில் யாராவது எச்சில் உமிழ்தல் மலசலம் கழித்தல் செய்யாது பாது காத்தல் – குளிக்காதவர், சுத்த ஆடை இல்லாதவர், விபூதி இடாதவர், மேல்வேட்டி சட்டை போட்டுக்கொள்பவர், வெற்றிலை, பாக்கு, புகையிலை போட்டிருப்பவர், புகைப்பவர் முதலானோரைத் திருக்கோயிலினுள்ளே விடாது பாதுகாப்பது - திருவிழாக்காலத்தில் வீதியைச் சுத்தஞ் செய்து நீர் தெளித்தல் - வாகனம் தாங்குதல் - தேர் வடம் பிடித்தல் - சாமரம் வீசுதல் - குடை கொடி, ஆலவட்டம், தீபம் பிடித்தல் முதலியன.

# 23. நீதிப்பாடல்கள்

## நல்வழி

இந்நூல் ஔவையாரால் அருளிச் செய்யப் பெற்றது; 40 நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. நல்ல வழிகளை இந்நூல் மக்களுக்கு அறிவுறுத்துவதால் இதற்கு நல்வழி என்ற பெயர் அமைந்தது. இவர் மூதுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதிநூல்களையும் எழுதியுள்ளார்.

ஔவையார் ஆதி என்ற புலைச்சிக்கும், பகவன் என்ற அந்தணனுக்கும் மகளாகத் தோன்றியதாக இவர் வரலாறு கூறுகின்றது. திருவள்ளுவர் இவரின் உடன் பிறந்தவரேயாவர்.

ஔவையார் மன்னர் பெருமக்களைச் சார்ந்து பாடிப் பரிசில் பெறுவது வழக்கம். அதியமான் என்னும் மன்னன் இவரிடத்தில் மிக்க அன்பு கொண்டு, அரிதாகக் கிடைத்த நெல்லிக் கனியொன்றைத் தானுண்ணாது ஔவையாரிடம் கொடுத்து உண்பித்தான். பொதுவாக ஔவையார் வரைந்த நீதிநூல்கள் எந்த நாட்டுக்கும் ஏற்ற அறத்தை விளக்குவதாகும்.

### கடவுள் வாழ்த்து

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா. (1)

(பதவுரை) கோலம்செய் - அழகைச் செய்கின்ற; துங்கம் - மேன்மை பொருந்திய; கரிமுகத்து - யானை முகத்தைக் கொண்ட; தூமணியே - தூய மாணிக்கமணி போன்ற பிள்ளையார் பெருமானே! பாலும் - ஆவின் பாலும்; தெளிதேனுங் - வடித் தெடுத்த தேனும்; பாகும் - வெல்லப்பாகும்; பருப்பும் - துவரை, கடலை முதலிய பருப்புக்களும்; கலந்து - இவை நான்கையும் ஒன்ருகச் சேர்த்து; உனக்கு - உங்களுக்கு; நான் தருவேன் - அடியேன் படைத்துத் தருவேன்; நீ எனக்கு - நீங்கள் அடியேனுக்கு; சங்கத் தமிழ் மூன் றும் - சங்கத்தில் வளர்க்கப் பெற்றதான இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழையும்; தா - தந்தருள் வீராக.

## நன்மை செய்ய வேண்டுமெனல்

புண்ணியஆம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்
ஈதொழியவேறில்லை எச்சமயத் தோர்சொல்லும் [கால்
தீதொழிய நன்மை செயல். (2)

(பதவுரை) புண்ணியம் ஆம் - அறம் நல்லதை உண்டாக்கும்; பாவம் போம் - பாவம் கெட்டதை உண்டாக்கும்; போனநாள் - முந்தின பிறப்பில்; செய்த அவை - செய்யப்பட்ட அறமும், பாவமும் ஆகியவை கள்; மண்ணில் - உலகத்தில்; பிறந்தார்க்கு - பிறந்த மக்களுக்கு; வைத்த பொருள் - இப்பிறப்பிலே இன் பத்தையும், துன்பத்தையும் நுகரும்படி வைக்கப்பட்ட ஒரு பொருளாக இருக்கின்றது; எண்ணுங்கால் — ஆராய்ச்சி செய்து பார்த்தால்; எச்சமயத்தோர் சொல்

ஆம் - எந்த மதத்தினர் கூறுவதும்; ஈது ஒழிய - இதைத் தவிர; வேறு இல்லை - மற்றொன்றுமில்லை; (ஆதலால்) தீது ஒழிய - பாவச் செயலை நீக்கி; நன்மை செயல் - நல்ல அறத்தையே செய்க.

(கருத்து) புண்ணியத்தால் நன்மை உண்டாகும்; பாவத்தால் தீமை உண்டாகும். ஆதலால் புண்ணியத்தையே செய்க.

## துன்பம் வரின் கவலையடைதல் கூடாது

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவனபோமினென்றாற் போகா-இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். (3)

(பதவுரை) வாராத - (ஊழின் வலிமையால்) நமக்கு வரக்கூடாத நன்மை தீமைகள்; வருந்தி அழைத்தாலும் - இரங்கி அழைத்தாலும்; வாரா - வரமாட்டா; பொருந்துவன - நமக்கு ஊழாய் வரக்கூடிய நன்மை தீமைகள்; போமின் என்றால் - போய்விடுங்கள் என்று கூறினால்; போகா - (நம்மை விட்டுச்) செல்லமாட்டா; இருந்து ஏங்கி - (இவ்வுண்மை அறியாமல்) இருந்தே ஏக்கங்கொண்டு; நெஞ்சம் - மனமானது; புண் ஆக - புண் ஆகும்படி; நெடுந்தூரம் - நீண்ட நாளளவு; தாம் நினைந்து - தாம் எண்ணி நொந்து; துஞ்சுவதே - இறந்து மடிவதே; மாந்தர் தொழில் - மக்களின் இயற்கைச் செயலாக இருக்கின்றது.

(கருத்து) ஊழின் வலிமையாலேயே நன்மை தீமைகள் வருகின்றன. ஆதலால் இன்பத்தை விரும்பியும், துன்பத்தை வெறுத்தும் கவலை கொள்ளுதல் கூடாது.

### மெய்யுணர்ந்தோர் பற்றற்று இருப்பர்

எல்லாப் படியாலும் எண்ணினுல் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினுல் ஆம்கமல நீர்போல்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. (4)

(பதவுரை) எல்லாப் படியாலும் - எல்லா விதத்திஞலும்; எண்ணினுல் - ஆராய்ந்து பார்த்தால்; இவ்வுடம்பு- இந்த உடலானது; பொல்லா - கெட்ட; புழு - பூச்சிகளும்; மலிநோய் - நிறைந்த பிணிகளும் இருக்கும்; புல் – மேன்மையில்லாத; குரம்பை - குடிசையாக இருக்கின்றது; நல்லார் - நல்ல அறிஞர்கள்; அறிந்து இருப்பர்- (இவ்வுடம்பின் இழிவான தன்மையை) நன்கு தெரிந்திருப்பார்; ஆதலினுல் - ஆகையால்; கமலம்-தாமரை இலையின்மேல்; நீர்போல் - தண்ணீரைப்போல்; (இலையிலிருந்தாலும் அதில் ஒட்டாமலிருப்பது போல) பிரிந்து இருப்பர் - (இவ்வுடலோடு ஒன்றுபட்டு இருந்தாலும்) வேருகப் பற்றற்று இருப்பார்கள்; பிறர்க்கு- இதை உணராத மற்றவர்களிடத்தில்; பேசார் - (இதைப் பற்றிப்) பேசாமல் இருப்பார்கள். ஆம்: அசை.

(கருத்து) உடம்பின் இழிவை அறிந்த மேலோர் உடம்புடன் ஒன்றுபட்டு உலகில் வாழ்ந்தாலும் அவ்வுடம்பில் பற்றில்லாமலே இருப்பர்.

### ஈய்ந்து இசையோடு வாழ்தலே நலம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும் (5)

(பதவுரை) மாநிலத்தீர் - பெரிய இந்நிலவுலகத்தில் வாழ்கின்றவர்களே! ஆண்டு ஆண்டுதோறும் - ஒவ்வொரு ஆண்டும்; அழுது - அழுதுகொண்டு; புரண்டாலும் - (கீழே விழுந்து) புரண்டாலும்; மாண்டார் - இறந்துபோனவர்; வருவாரோ - (மீண்டும் உயிர் பெற்று எழுந்து) வருவார்களோ! வேண்டா - (ஆதலால்) நீங்கள் வருந்த வேண்டுவதில்லை; நமக்கும் - நம எல்லோருக்கும்; அது - அவ்வாறிருப்பதுவே; வழி - வழியாக இருக்கின்றது; நாம்போம் - நாம் இறந்துபோகின்ற; அளவும் - வரையிலும்; எமக்கு - நமக்கு; என்என்று - (இவர் இறந்தால்) என்ன தொடர்பு என்று கருதி; இட்டு - (ஏழை மக்களுக்கு ஒன்றைக்) கொடுத்து; உண்டு - நீங்களும் உணவு உண்டு; இரும் - (உலகில் மகிழ்ச்சியோடு) வாழுங்கள்.

(கருத்து) இறந்து போனவர்கட்கு அழுவதால் யாதொரு பயனுமில்லை. கவலையில்லாது அறஞ்செய்து வாழ்வது சிறந்தது.

### திருவைந்தெழுத்தின் உயர்வு

சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதிஆகும் அல்லாத எல்லாம்
விதியே மதிஆய் விடும். (6)

(பதவுரை) சிவாய நம என்று சிந்தித்து - சிவபெருமானுக்குரிய ஐந்தெழுத்து மந்திரமாகிய சிவாயநம என்று கருதித் தியானித்துக் கொண்டு; இருப்போர்க்கு - வாழ்பவர்கட்கு; ஒருநாளும் - ஒருபொழுதும்; அபாயம் இல்லை - துன்பம் வராது; இதுவே - இஃது ஒன்றே; உபாயம் - (உயிருக்கு நல்ல) வழியாகும்; மதி ஆகும் - அறிவும் ஆகும்; அல்லாத எல்லாம் - இஃதல்லாத மற்ற

எந்தச் செயலும்; விதியே - ஊழே; மதி - அறிவாக; ஆய்விடும் - ஆகிப்போகும்.

(கருத்து) சிவபெருமானுக்குரிய திருவைந்தெழுத்தை எக்காலும் மாறாமல் எண்ணிக்கொண்டு இருப்பவருக்கு ஊழால் வரும் துன்பம் உண்டாகாது; மற்றையோருக்கு உண்டாகும்.

### தீவினையாலே வறுமை வரும்

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவம் என்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். (7)

(பதவுரை) வையத்து - உலகத்தில்; பாவம் அறும் - (அறம் செய்வதனால்) தீமை நீங்கும்; என்ன-என்று அறிந்து - தெரிந்து; அன்று - முந்தின காலத்தில்; இடார்க்கு-(ஏழை மக்களுக்கு ஒன்றையும்) ஈயாதவருக்கு; செய் - தம்மால் செய்யப்பட்ட; தீவினை - அப்பாவமானது; இருக்க-(வறுமையைக் கொடுக்கும் விதையாக) இருக்கும்போது; இன்று - இப்பொழுது; தெய்வத்தை - கடவுளை; நொந்தக்கால்-வெறுத்தால்; இரு - பெரிய; நிதியம் - செல்வம்; எய்த - பொருந்த; வருமோ-கிடைக்குமோ (கிடைக்காது) வெறும்பானை-தண்ணீர் ஊற்றி வைக்காத பானையானது! மேல் பொங்குமோ (அடுப்பில் வைத்துத் தீ மூட்டி எரித்தால்) மேலே பொங்கிக்கொண்டு வருமோ? (வராது).

(கருத்து) வறியவர்கள் அவ்வறுமைக்குக் காரணமாகத் தீவினை செய்த தம்மை நோவாமல்; தெய்வத்தை நோவதால் யாதொரு பயனுமில்லை.

## வாழ்வில் உயர்ந்தவைகள்

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ்—மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை. (8)

(பதவுரை) நீறு - திருநீறு; இல்லா - இல்லாத (அணியாத); நெற்றி - (ஒருவரது) நெற்றியானது; பாழ் - சிறவாது; நெய் இல்லா - நெய்யில்லாத; உண்டி - உணவு; பாழ்-பாழாகும்; ஆறு இல்லா - ஆறு இல்லாத; ஊருக்கு-ஊர்களுக்கு; அழகு பால் - அழகு பாழாகும்; மாறு இல்-வேற்றுமை இல்லாத; உடன் பிறப்பு - சகோதரர்கள்; இல்லா-இல்லாத; உடம்பு - (ஒருவரது) பிறப்பு; பாழ்-பாழாகும்; மடக்கொடி - இளமை பொருந்திய கொடி போன்ற நல்ல மனையாள்; இல்லா - இல்லாத; மனை-வீடு; பாழ் - பாழாகும்.

(கருத்து) திருநீறணியாத நெற்றியும், நெய்யில்லாத உணவும், ஆறில்லாத ஊர்களும், துணைவரில்லாத ஒருவன் பிறப்பும், மனையாள் இல்லாத வீடும் பெருமையை இழக்கும்.

## எல்லாம் இறைவன் செயல்

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (9)

(பதவுரை) ஒன்றை நினைக்கின் - ஒரு பொருளைப் பெற எண்ணினால்; அது - நினைத்த அந்தப் பொருள்; ஒழிந்திட்டு-கிடைக்காமல்; ஒன்று ஆகும் - வேறொன்று

கிடைத்தாலும் கிடைக்கலாம்; அன்றி - அல்லாமல்; அது வரினும் – அப்பொருளே கிட்டினாலும்; வந்து எய்தும் - கிடைத்தலும் கூடும். ஒன்றை - ஒரு பொருளை; நினையாத முன் - நினையாதிருக்கும்போதே; வந்து நிற்பினும்- கிட்டி வந்து நின்றாலும்; நிற்கும் - நிற்கவும் கூடும். எனை - என்னை; ஆளும் - ஆண்டருளுகின்ற ஈசன் - கடவுளுடைய; செயல் - செய்கைகள் ஆகுவனவாம்.

(கருத்து) எல்லாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல கடவுள் அருளால் அல்லாமல், நம்மால் ஒன்றும் ஆவதில்லை.

## பேராசை அற்ற வாழ்வே பெருவாழ்வு

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான் (10)

(பதவுரை) உண்பது - மக்கள் உண்பது; நாழி - ஒரு நாழி அளவு சோறேயாகும்; உடுப்பது - (அரையில்) உடுத்துக்கொள்வது; நான்கு முழம் - நான்கு முழ அளவுள்ள ஆடையேயாகும்; (இவை இவ்வாறே) நினைத்து- நினைத்து; எண்ணுவன-எண்ணிப் பார்க்கின்ற காரியங்கள்; எண்பது கோடி - எண்பது கோடியளவினவாம்; (ஆதலால்) கண்புதைந்த-அறிவுக்கண் மூடி இருக்கின்ற மாந்தர் - மக்களின்; குடிவாழ்க்கை-குடும்பத்திலிருந்து வாழும் வாழ்வு; மண்ணின் - மண்ணால் செய்த; கலம் போல - கலத்தைப் போல; சாம் – சாகின்ற; துணையும் கால அளவும்; சஞ்சலமே – (அவர்க்குத்) துன்பமாகவே உள்ளது. தான் - அசை.

(கருத்து) போதுமென்னும் மனநிறைவே மக்கட்கு நல்லது. அவ்வாறன்றிப் பேராசைப்படுவோர் தாம் இறக்கும்வரை துன்பமே அடைவர்.

### ஈகை உடையவர் யாவரும் உறவு

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்று தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். (11)

(பதவுரை) மரம் பழுத்தால் - மரங்கள் பழமுடையனவாக இருந்தால்; வௌவாலை - வௌவாற் பறவையை; வா என்று கூவி - (இப்பழத்தைத் தின்பதற்கு) வருக என்று கூப்பிட்டு; இரந்து - வேண்டி அழைப்பார் - அழைப்பவர்கள்; யாவரும் - எவரும்; அங்கு - அம்மரங்களிடத்தே; இல்லை - இல்லை; கன்றுஆ - கன்றையுடைய பசுவானது; அமுதம் - (தனது) பாலை; சுரந்து - மடியில் சுரந்து; தரல்போல்-(தன் கன்றுக்கும் மற்றோர்க்கும்) கொடுப்பதைப்போல்; கரவாது - மறைக்காமல்; அளிப்பரேல்-எல்லோருக்கும் கொடுப்பாரானால்; உலகத்தவர் உற்றார் - (அவ்வௌவால் போல) உலகத்தவர் எல்லோரும் தாமே வந்து சேர்ந்து) உறவு கொள்வார்கள்.

(கருத்து) ஈகைக்குணம் உடையவர்களோடு எல்லோரும் வந்து உறவாடுவார்கள்.

### உயரிய நூல்கள்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். (12)

(பதவுரை) தேவர் - திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த; குறளும் - திருக்குறளும்; திரு - சிறப்புமிக்க;

நான் மறை - நான்கு மறைகளின்; முடிவும் - முடிவான உபநிடதங்களும்; மூவர் - (திருஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய சமயகுரவர்) மூவரும் அருளிச் செய்த; தமிழும் - தமிழ் மறைக ளாகிய தேவாரத் திருமுறைகளும்; முனிமொழியும் - மாணிக்கவாசக முனிவர் அருளிச்செய்த; கோவை-திருக் கோவையார்;திருவாசகமும் - திருவாசகமுமாகிய மறை களும்; திருமூலர் - திருமூலநாயனார் அருளிச் செய்த; சொல்லும் - திருமந்திரமும்; ஒரு-ஒப்பற்ற பொருளையே கூறுகின்ற; வாசகம் - திருமறைகளாகும்; என்று - என; உணர் - நீ அறிந்து கொள்வாயாக.

(கருத்து) திருக்குறள், உபநிடதம், தேவாரம், திருக் கோவையார். திருவாசகம், திருமந்திரமாகிய நூல்கள் ஒப்பற்ற நூல்கள் ஆகும்.

---

வித்தியாதிபதி அவர்களால் 25-6-57 இல் சைவ சமய பாட புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது.

## சைவ சமய பாடம்

சைவ சமய மாணவர்களின் சமய விருத்திக்குப் பெரிதும் உதவுவது. அரசினரின் புதிய சைவ சமய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது. அநேக விளக்கப்படங்களுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

| | ரூ. சதம் |
|---|---|
| 2 ஆம் வகுப்பு | 70 |
| 3 ,, | 80 |
| 4 ,, | 1-00 |
| 5 ,, | 1-10 |
| 6 ,, | 1-50 |
| 7 ,, | 2-00 |
| 8 ,, | 2-50 |
| G. C. E. இந்து சமயம் | 3-00 |

# SAIVA SAMAYA PADAM

STANDARD V

---

KALAIVANI BOOK CENTRE

JAFFNA — KANDY

(COPYRIGHT)